வீழ் 01 — கலை இலக்கிய சஞ்சிகை — இதழ் 03


## சமாதானப் பயணத்தில் இலக்கியத்தின் நிலை

இலங்கை தமிழ் இலக்கிய சூழலில் எதிர்ப்பு இலக்கியம், போர்க்கால இலக்கியம் நற்போக்கு முற்போக்கு என்ப புதிய "இசம்"களைக் காண்பதற்கு முன்பு நமது நாட்டின் சமாதானப் பயணத்தில் இன்றைய தமிழ் இலக்கிய நிலை தொடர்பான விடயங்களை கவனத்தில் கொள்ளுதல் அவசர அவசிய தேவை உள்ளது. நம் ஜெனத்தானின் உடம்பில் மறைவாக ஓடுகின்ற இனவாத ரத்தத்தால்தான் நாடு அழிந்து கொண்டிருக்கிறது என்று கூறுவதில் சிறிதளவும் ஐயமில்லை. நாம் நேரில் காணும்படி இனவெறிக் கலாசாரத் தேவைகளையும், வகைகளையும், உறவுகளையும், பணிகளையும் மிகவும் ஆழ்ந்தகன்று அற்புதம் அற்புதம் என்று அதன் கருத்துக் கருவூலங்களை ஏற்றிப் போற்றுகின்றோம். இது இலக்கிய வளர்ச்சிக்கு மட்டுமல்ல முழு இலங்கை மனித சமூகத்திற்கே உகந்ததல்ல.

மக்கள் மனதில் இன்றைய இலக்கியங்கள் சமாதானக் கருத்துக்கள் பற்றி எந்தளவுக்கு விதைத்திருக்கிறது என்ற கேள்விக்கே இடம் இல்லை. புரியாத படைப்பாக்கங்களை வைத்துக் கொண்டு மண்டையைப் போட்டு உருட்டி வதைத்துக் கொண்டிருப்பதை அதிகம் கண்டு கொள்ளலாம். இலக்கிய நூல்கள் [illegible] எத்தனையோ வெளிவருகின்றன. சில நூல்களுக்கு வெளியீட்டு விழா பெரும் கோலாகலமாய் நடைபெறும். பொன்னாடை, மலர்மாலை என்பன கிடைக்கும். அதற்குப்பிறகு நூலுக்குப் பரிசும் கொடுப்பார்கள். நூலாசிரியர்களிடம் தற்புகழ் ஒன்று தன்னகங்காரம் வழிந்து நிற்கும். நூலைச் கலைத்துப் பார்த்தால் ஒரு பக்கச் சாயம் மட்டும் தெரியும். இனஒற்றுமைக்கு இடம் இல்லை. இத்தகைய அலங்கோலங்களெல்லாம் கொண்டிருப்பதை விட இன்றைய இலக்கிய சிருஷ்டிகளில் மாறுதல், புதுமை என்று சிறந்த சமாதான இலக்கியங்களைப் படைப்பதினால் மாத்திரந்தான் அதை படிக்கும் வாசகர்களாகட்டும் (Valuejudgement) திறனாய்வாளர்களாகட்டும் மனமுவந்து ஏற்பர். அதன் குண நலன்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவர். நம் மண்ணில் பிறக்கும் எந்தக் குழந்தையும் எதிர்காலத்தைக் கண்டு அஞ்சாமல் உயிர் வாழுவர். சமாதானம் என்ற சொல்லாக்கம் சிறந்து மிளிரும்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பதால் காலத்துக்கு ஏற்ற அமைதியான மாற்றங்களுக்கு சமாதான இலக்கியம் முன்னின்று வழி வகுத்தல் வேண்டும். அதில் அறம், கனம், கற்பனை, நயம், புதுமை, கருத்து முதலிய பிரதிபலிக்கப்பட வேண்டும். அப்போதுதான் மனித மனங்களெல்லாம் தூய்மையுடன் தெளிவாகவும் அழகும் அன்பும் பண்பும் நிறைந்து மனித ஒற்றுமை ஒன்றி ஒலிக்கும்.

ஆசிரியர்.


ஆசிரியர்:
இக்பால் அலி

துணை ஆசிரியர்கள்:
இரா.அ.இராமன்
ரீ. அமானுல்லாஹ்
முஸ்தபா ஏ.ஹகீம்

கணனி வடிவமைப்பு
ஒக்ஸ்போட் கிராபிக்ஸ்
பறகஹதெனிய
Tel: 072-2517597

அன்பளிப்பு : [illegible]/=



முகவரி
738/B, தோம்புதோர் வீதி,
சாய்ந்தமருது-17.

Tel: 0777-063168

E-Mail iqbalfareena@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# [illegible]

இக்பால் அலி

கையிலிருந்த அழைப்பிதழ் ஒழிந்து விட்டது. துவிச்சக்கர வண்டியில் சென்ற அமீர் அவசரமாக வீடு வந்தான். அப்போது அவன் மனைவி பகல் உணவு சமைத்துக் கொண்டிருந்தாள்.

காலையில் பால் அப்பத் தேத்தண்ணியோடே அலைந்து திரிந்தான். இடையில் ஒரு பச்சத் தண்ணிகூட அவன் நாவில் படவில்லைதான். நிருபர்களுக்கெல்லாம் காலடியில் சென்று சொல்லியாச்சு. இடைக்கிடையே விழும் மனைவியின் ஏச்சுப் பேச்சுக்கெல்லாம் காது கொடுப்பதில்லை. ஏற்பாட்டில் கொஞ்சம் கூட அசகு பிசகு வந்திடாத விழாவாகவே 'நடக்கணும் நடக்கணும்' என்று மனம் துடித்தது.

அப்போதுதான் தூங்கி எழும்பினாள் மகள். அவளுடன் கொஞ்சி விளையாடிப் போட்டுச் சாப்பிட்டான். சாப்பிடப் போனவன் நாலு மூனு வாயுடன் கை கழுவி விட்டான். மனசுக்குள் பிரதம அதிதியின் எண்ணங்கள். நிச்சயம் வருவேன் என்று சொன்னவர்தான் சில நேரம் வராமல் போனால் சனங்கள் ஏசுவார்கள். ஊடகங்களூடாக செய்திகளும் வரும். ஊரில் விழாபற்றி ஒரே பரபரப்பான கதைகள் அடிபடும். தனது பெயர் உச்சரிக்கப்படும் என்ற சந்தோசம் மனதினில் இருக்கும். ப்த்திரிகையாலர்கள் கௌரவிப்பா அமைச்சர் வருவாரா, என்று ஆவலாகக் கேட்பார்கள் கண்பவர்களெல்லாம்.

''யாராக்கள கௌரவிக்கப் போறீங்க'' என்று தெரிந்தும் சும்மா கேட்பார்கள் சிலர். அழைத்தால் வரமாட்டார்கள் பின்பு கண்டால் முக்கியமான வேலை என்று சமாளித்துக் கொள்வார்கள். இதுதான் உங்க கண்ணுக்குத்தான் தெரியல்லியோ பேப்பரைப் படிங்க என்று சிடு முகத்துடன் கதைக்காமல் அந்த நபர்களும் வர வேணும் மண்டபம் நிறைந்த சனங்கள் இருக்க வேணும். பேசப்படும் கருத்துக்களால் நல்ல பயன்கள் பெற வேணும். இந்த ஊரில் வெண்புறா சிறகு விரிக்க வேணும். இன ஐக்கியம் பூக்க வேணும். தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான நெருக்கமான உறவைப் பார்த்து பொறாமை கொள்ளணும். அதற்காவது சரி இவ்விழா நடத்தியாகணும்.

உணவையும், பந்த உறவையும் பாராது வேகமும் விவேகமுமாய்ச் சிந்தித்தான் அமீர். வெயிலையும் அலுப்பையும் பாராமல் தனது துவிச்சக்கர வண்டியில் ஏறிக் குந்தினான்.

அதிகாரியிடம் மண்டப அனுமதி பெறப் போனான். அவன், அப்பன் வீட்டுச் சொத்துப் போல பேரம் பேசினான். ''மண்டபம் கொடுப்பது கஷ்டம்'' அதற்கு சட்டதிட்டங்கள் மிகக் கடுமையாக இருக்கு. ஹோல்ல கதிரையை அங்க இஞ்சென்டு இழுத்து உடைத்தீங்கன்னா நஷ்டம் கட்டணும். வைப்புப் பணம் வேணும். எதற்கும் மண்டபம் உரிய திகதிக்கு கொடுக்கலாமாவெனப் பாக்கணும். காலியாக இருந்தால் தருகிறேன். விரும்பியும் விரும்பாமலும் அனுமதிக் கடிதம் கொடுத்தான். அந்த அரச அதிகாரியின் மனக் கதவுகள் திறந்தன. ஆனால் சிற்றூழியரின் மனக்கதவு திறக்கவில்லை. நாலு பணம் சம்பாதிப்பதற்காய் நாலு கோணலான வார்த்தைகள். எதற்கும் வாய் திறந்து பேசவில்லை. அஞ்சு சதமும் இழக்கக் கூடாதென உணர்ந்தான் அமீர். கையைப் பொத்தி ஒன்று கொடுக்கணும் போல மனம் துடித்தது.

ஹோலை சும்மா தருவதற்கு என்ன இழவுடா இது. அரசு கட்டினது எதற்காக? நாலு பேரை நன்றி பாராட்டி கௌரவிப்பது என்ன குறைஞ்சிதாம்? இந்த எழுத்தாளனுக செய்கின்ற பணியினால்தான் ஊரைப் பற்றி வெளி ஊரில பெருமையா பேசிக் கொள்றாங்க.

மேடைப் பேச்சின் போது உணர்ச்சி வசப்பட்டு எழும் குரல் அலைகளின் சீற்றங்கள் குரலின் தொணியை மாற்றுகின்றன. சீற்றத்தை வெளிக்காட்ட இயலாது. அவனை பகைமை பாராட்ட முடியாது. குறித்த தினத்தில் நிகழ்ச்சி நடந்தாகணும். கதிரைகள் ஒழுங்கமைப்பு செய்யவேணும்.ஒலி-ஒளி என்று பல உதவிகள் பெற வேண்டிய நிலை இருந்தது.

பள்ளிக் கூடம் கலைந்து விடயதானங்களை தனியாகப் பேசும் நேரம் அதிபர் அலுவலகத்தில் இருந்தார். அதிபர் மேசைக்கு முன்னே இரு கதிரைகள் இருந்தன. அதில் ஒன்றில் ''குசு குசு'' என்று இன்னொருத்தன் இருந்தான். ரிங் ரிங் என்று தொலைபேசி மணியடிக்கின்ற சப்தம்.

இருவரும் இவனைப் பார்த்துப் புன்னகைத்தார்கள். உள்ளே செல்லவில்லை. தொலைபேசியில் பேசி முடியும் வரை வெளியிலே நின்றான். அதிபர் கதிரையில் அமரும்படி சைகையூடாகச் சொன்னார். இருங்க கன நாளாக் காணல்ல என்ன சமாச்சாரம். இலக்கியக் கூட்டமோ என்ற வார்த்தை அங்கு இருந்தவனின் வாயிலிருந்து பிறந்தது.

அதிபரைப் பொறுத்தவரை மிகவும் நல்ல மனிதர் . எதற்கும் உதவுபவர். அவரும் இலக்கிய ஆர்வத்தாலேதான் ஊக்கமளிக்கிறார். முழு நேரத்தையும் இலக்கியம் கல்வி என அர்ப்பணித்துவிட்டார்.

''என்ன செய்தி ஏது செய்யணும்'' என்று தானும் அதிபர் போன்று அங்கே இருந்தவனின் கேள்வி.

அமீர் அதிபரிடம் கதைப்பதற்கு மனதிற்குள் நிறையப் பூட்டி வைத்திருந்தான். பொன்னாடை இரண்டும், விருது ஒன்றும் மிஞ்சிக் கிடக்கும் கதிரைகளை நிறைப்பதற்கு பள்ளிக்கூட உயர்தரப் பிள்ளைகளையும் தாங்க என்று கேட்க இருந்தான். ஆனால் பக்கத்தில் இருந்தவன் சரியில்லை. பெரிதாகக் கதைக்க வில்லை.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக என்றால்.... அதிபரைப் போன்று ஊரில ஒரு சிலர்தான் உண்டு. சொச்சமுள்ள ஐந்து விருதுகளையும் நான்கு பொன்னாடைகளையும் பெற்றுக் கொண்டாச்சி. அதுவும் பெரும்பாடுகளுக்கிடையேதான் கிடைச்சிது. எல்லாத்திற்கும் மேலாக தன் மானம் இழந்து பிச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பது போல.

இவனும் கதையை –;விழ்த்தான். அமைச்சர் வார விழா. பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் நல்ல பொருத்தம். ஊடகத்துறை சம்பந்தமாக படிக்கலாம். நீங்களும் கட்டாயம் வரணும். எல்லாமே பேப்பர்ல பாத்திருப்பீங்க. ஆனா செலவுதான் உதைக்கிறது.........

''அமைச்சர் வருவாரா?''

''ச்சே... அமைச்சர் வர மாட்டார்''

''நிச்சியம் வருவார்''

''ம் ... இல்லை''

''அமைச்சரின்ற நண்பருடன் ராவு கதைத்த நான்''

''அந்த தினத்தில் கொழும்பில முக்கிய மீட்டிங் இருக்காம்''

அவனுக்குள் ஒரு பதற்றம் ''சேர்.. அமைச்சரோட பொய் வாக்குறுதிக்கா இந்த பெரிய ஏற்பாடு''

அவனுக்கு கூட்டத்தை ஒத்தி வைத்த மாதிரி இருந்தது. இன்னொருத்தனின் பல்லெல்லாம் வெளியே.

''என்னங்க''

''ஊரிலே நாங்களவ நடத்தாத கூட்டமா? 'இந்தா' என்றா அழைப்பிதழ் இருக்கும்.

''சின்னப் பொடியனுக செய்கிற கூட்டம் குஞ்சடி ஒழுங்கா இருக்காது. உதவிதான் எதற்கு?''

''இதால ஓடி அலைஞ்சி திரிஞ்சி என்ன மிச்சம் கண்டீங்க?

''இலக்கியமும் மண்ணாங் கட்டியும் போட்டிட்டு சும்மா கிடங்க.

''செஞ்சி சிரைச்சது ஒன்னுமில்லை. செய்யப் போறதுமில்ல. செய்கிறவளை விடுவதுமில்லை சேர். நம்ம சனங்க எப்போதும் இப்படித்தான் கதைப்பாங்க. அறிஞர்கள் சொன்னத்தைக் கேட்டிருக்கிறேன்.

இப்போ மனிதர்கள் நன்றி கெட்டவர்களாய்ப் போயிட்டார்கள் என்பார்கள். அது மெய்யாப் போய்ச்சு சேர்.

ஒரு விருதுக்கு மட்டும் பணம் கொடுத்தார். இனி விருதுக்கும் பொன்னாடைகளுக்கும் இன்னொருத்தரிடம் பல் இழிக்க வேணும்.

காழ்புணர்ச்சியின் தன்மை அவன் பேச்சிலே அப்படியே காணலாயிற்று. அதிபர் அவனுக்குப் பயம். அவன் அரசியல்வாதியின் ஏஜன்டு என்பதால் மௌனம் சாதித்தார்.

''யார் நன்றி கெட்டவனுக''

''தன்னப் படைத்த அல்லாஹ்வுக்கும் மனச் சாட்சிக்கும் மாறு செய்பவனே நன்றி கெட்டவனுக''

''கௌரவிப்பில அது எப்படி வரும்''

''அவன் சந்தோசத்தில''

இதுல எனக்கொன்றும் படல்ல''

''சரி''

''எனக்கென்றா அமைச்சர் வாரது நம்பிக்கையில்லை.கிடைச்சா நானும் வாரேன்''

''யார் வாரதே வரவில்லையோ நிகழ்ச்சி நடக்கும்''

அமீருக்கு கூட்டத்திற்கு ஊடகவியளாலர் வராதது ஒரு மாதிரி வெடுக்கென்றது. அந்த ஒருவனின் சிரிப்பும் குத்தலான பேச்சும் கதையும் மனதிக்குள் அவமானம் ஏற்படுத்தலாயிற்று.

தரித்திரியம் புடிச்சவன் இல்லாதிருந்தா இன்னுமோரிடத்திற் சென்று கெஞ்சாம சமாளித்திருக்கலாம் என்ற அங்கலாய்ப்பாடீ எண்ணத்தோட பள்ளிக் கூடம் விட்டு அகன்றான்.

அவன் முகத்திற்குள் ஆறுமுகங்கள் ''தம்பி கௌரவிப்பா .யார் யாருங்க'' என்று கேட்கின்ற போது ''உங்களையும்தான்'' என்கின்ற போது பூரிப்படையும் உள்ளங்கள் . ஆஹா ஆனந்த வெள்ளத்தில் மிதக்கும். இலக்கிய பூம்புனலின் தாலாட்டுப் பாடும்.

இன்ன பத்திரிகையில்தான் என் முதல் செய்தி பிரசுரமானது என்று சொல்லும் சிவலிங்கத்தின் மாத்தாப்பு. இன்ன ஆசிரியர்தான் தன்னை வளர்த்தவர் என்று சொல்லும் முபாரக்கின் வெத்திலை வாயின் புன்னகை . இந்த சம்பவத்தைத்தான் தான் முதல் எழுதினேன் என்று சொல்லும் பிரியன்தாவின் பெருமை. வஸில், சந்தனம், சாந்த கௌரவிக்கப்படுபவர்களின் குதூகலம் கும்மாளம் தோன்றி மறைந்தன.

வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்த துவிச்சக்கர வண்டி 'டப்' என்ற புச்சி வெடிச்சத்தத்துடன் வெடித்தது. தேய்ந்த டயர் டியூப் கம்பிக்கட்டுடன் போய் இருந்தது. பைசிக்கல் கடைக்காரன் நௌபீலுக்கு கூலியோடு சேர்த்து டியூப் டயருக்கு நானூறு ரூபா ஒதுக்க வேண்டியிருந்தது அமீருக்கு.

குடும்ப வாழ்க்கைச் செலவில் துண்டுவிழும் என்ற கவலையை மறைப்பதற்காய் பைசிக்கில் கடையில் பைசிக்களைத் திருத்த ஒப்படைத்து விட்டு மீதிப் பொன்னாடையை யோசித்தான்.கல்முனை மிசனரிக் கல்லூரி கிட்டத்தான் பாதர் பெனடிக் இருப்பார். சந்தித்தால் போச்சு.

இனப்பிரச்சினை வந்த பிறகு ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தோடு பழகும் அந்நியோன்யம் குறைந்து விட்டது. ஒரே பீங்கானில் சாப்பிடுவார்கள். முன்பு கல்யாணம், கூத்து, கலை, இலக்கிய விழாக்களில் எல்லா இன முகங்களையும் பார்க்கலாம். எந்த ஊரிலும் இலக்கியக் கருத்தரங்குகளுக்கு ஒரு குறிப்பிட்ட சமூகம்தான் வேண்டுமென்பதில்லை. அக்கருத்தரங்கின் பால் பல்லின மக்களின் செய்திகள் இலகுவாக அறிந்து கொள்ளலாம். இலக்கியக் குடும்பத்திற்குள் அப்படியோர் பந்தம்.

இப்ப குத்து வெட்டுக் காலம். திரும்புந்திசையெல்லாம் குத்து வெட்டுத்தான். குழுக்களாய்ப் பிரிந்து குழி பறிக்க குறி பார்க்கும் காலமாய்ப் போச்சுது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியவாதிகளுக்கே லெக்கில்லை. பேனா மையெல்லாம் இன வெறித்தாளில் ஊறி இரத்தப் பிரளயம் உருவாக்கும் புத்தகம்தான் வாசிப்புப் புழக்கத்திற்கு. அதற்குள் பிரதேசவாத வெறியும் கூட. ''வாருங்கள்! நல்ல விடயம் என்று நாடி வருபவர்கள் எல்லோரும் சொல்லாம கதிரையில் இருக்க வேணும்.'' இந்தச் செய்தி அறிந்ததும் நாம் கொஞ்சம் கொஞ்சமாக சேகரித்து வைத்திருந்த உண்டியலைக் கொண்டு வந்தார் பாதர்.

மனமகிழ்ந்து உண்டியலை வாங்கிக் கொண்டான் அமீர். விழாவை ஜாம் ஜாம் என நடத்தலாம் என்று நினைத்தான். துண்டு விழும் மனப் பயம் நீங்கியது. உண்டியலைக் கொட்டிப் பார்த்தான். விழாவுக்கான காசு போதுமானதாய் இருந்தது மனதிற்குள் பாதர் பற்றி நல்லெண்ணம் நிறைம்பி வழிந்தது.

மனசு கண்டிப் பக்கம் திரும்புகிறது. இருபது வருடங்களுக்கு மேலாக ஏராளமான விழாக்கள் நடத்தின அனுபவமிக்கவன் நான். இந்த மாதிரி அழுத்த வேலை இல்லை. கெஞ்சி மடிந்து காலில் விழுந்ததில்லை. விழா என்றால் புரவலர்களின் ஒத்துழைப்பால் விழா நடந்தேறும். ''ஆக்கம் ஊக்கம்'' அளிக்க சூழலில் உயர்ந்த தமிழ்த தாகம் இருந்தது.

இஞ்ச....... படையினருடைய கொடிய கெடுபிடிகள் கசனாக் கிடக்கு. குறிப்பிட்ட நேரத்திற்குள் விழாவை முடிச்சிடனும். தூரத்திலுள்ளவர்கள் வரப்போக இயலாது. ஆட்களுக்கு வட்டா வைக்க வேணும். ஏற்பாட்டாளர்கள் நாய்பாடாய் பாடுபடனும். எல்லாத்திற்கும் உசத்தியாக எழுத்தாளர்கள் கூட இங்கேதான். ஆனா....

அமீர் விழாவை பிரதேச பகுப்பாய்வு செய்து கொண்டிருந்தான். ஊர் சூழல் வித்தியாசங்கள் மனதுக்குள் ஊடறுத்துக் கொண்டிருந்தன.

சிந்தனைகள் திரும்பத் திரும்ப ஒன்றாகவே இருந்தது. மீண்டும் கல்லூரிக் கதை நெஞ்சுக்குள் சிக்குகிறது. '' அமைச்சர் வர மாட்டார்'' என்ற காழ்புணர்ச்சியால் வந்த வடு.

இப்படிப்பட்டவனுக செய்வதுமில்லை. செய்பவர்களை விடுவதுமில்லை. ..... மனசுக்குள் ஒரு பக்கம் எரிச்சல். மறு பக்கம் பயம்.

நிஜமாக அமைச்சர் வராமல் போயிட்டா? வந்தால் என்ன வராவிட்டால் என்ன வருவார் என்ற நம்பிக்கையோடு விழாவை சிறப்பாக நடத்தப் பாக்கனும். அது தான்டா நம்மிட சமத்து.

அவன் இருக்கும் போது கல்லூரிக்குப் போனது தவறு. சும்மா வந்திருக்கணும். மற்றவர்களுடைய சந்தோசத்திற்காக கஷ்டப்படுவது கூட எரிச்சலாகக் கிடக்கு.

புகைத்தலுக்குள் இருந்தாலும் எரிச்சலுக்குள் இருக்கக் கூடாது என்ற ஜாலங்களின் ஜனனம். நல்லதைத் தடுக்கின்ற முட்டுக் கட்டைகள் மலிந்த புகை மண்டலங்கள். வானில் கரு முகில் ஒட்டிக்கொள்கின்றது. ஆனாலும் காற்று வந்து கலைத்து விடும் என்ற நம்பிக்கை அமீருக்கு.

மற்றவர்களுடைய மனங்களைச் சந்தோசப்படுத்த விரும்பாத மனிதர்களா?

'' என்ன சாதி உலகமோ'' என்று வாய்க்குள் முணுமுணுத்தான். கனைத்துக் காறி ''தூ'' எனத் துப்பினான்.

இது நமக்குத் தேவைதானா? வயிற்றுக்கு கஞ்சி ஊத்தாத சேவை. மற்றவர்களோடு வீண் பகை எதற்கு? சும்மா அலைந்து திரிந்து போய் ஏச்சு வாங்குவதுதான் மிச்சம்''

முணுமுணுப்போடு சங்கமித்துப் புலம்புகிற வேதனைகள்.தேன் சிந்தும் தமிழ் மொழிக்காக படும் அவஸ்தைகள். பைசிக்கல் கடைக்காரனுக்குரிய கூலிக்கு வக்கற்று போன சட்டைப் பைக்குள் கை உலாவுகிறது. '' காசில்லையாப்பா.... அமீர். பிறகெடுப்போமே.''

பைசிக்கல் கடைக்காரன் நௌபில் அமீரின் நிலை அறிந்து கதைத்தான். வால் கட்டையைப் போட்டவாறு அமீரிடம் 'பம்' எடுத்துக் காற்றடிக்கும் படி சைகை காட்டினான்.

சிறு பராயந் தொட்டே பைசிக்கல் கடைக்காரனை வாடிக்கையாளராக் கொண்டு நன்கு பழகுவான் அமீர்.

''இப்ப காசு பக்கட்டில இல்ல''

''பிறகு எடுக்கலாம்னு சொன்னேனே''

''கையில ஊராவூட்டுக் காசுதான் இருக்கு''

''ஒரே ஓட்டமாகக் கிடக்கு''

''தெரிஞ்ச விசயந்தானே''

''ஹா! அதா''

அமீர் முகம் வெயிலில் கறுத்திருந்தது. சேட் வியர்த்து நனைந்து தொப்பு. கொஞ்சம் இளைப்பாறுவதற்காய் அங்கிருந்த வாங்கில் அமர்ந்தான்.

''அரசியல்வாதிகளோட உறவுகளில்லையா''

''என்னத்திற்காம்''

''பிக்கப் ஓடலாம், சம்பாதிக்கலாம்''

''இலக்கியத்துல எதக் கண்டீங்க''

நௌபிலின் குத்தலான கதை இதயத்தை துளைக்க. அமீர் முகம் சுழித்தவனாய் எழுந்தான். இஸ்டாண்டில் நிறுத்தியிருந்த சைக்கிலினை எடுத்தான்.

''நான் போகிறேன்''

''நல்லா யோசி''

''யோசிக்க ஒன்னுமில்லை''

''திருத்தவே இயலாது, நீ போய் வா''

இன்னும் ஒரு ராவுதான் இருக்கிறது. ஹோல் , அழைப்பிதழ், வீடியோ, ஓடியோ, பெனர், இயக்க உறுப்பினர்களின் செயற்பாடுகளெல்லாம் பகிர்ந்தளிக்கப்பட்டு ஏற்பாடுகள் பூர்த்தி. வெளிப்படையில் விழாவுக்கு ஆதரவாயினும் நிகழ்வில் பிரதம அதிதி கலந்து கொள்ளக் கூடாதென்ற கசப்பான எண்ணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே வெறும் வேசம். ஊரில் அரசியல்வாதியைப் பந்தம் பிடிப்பது பிழைப்புக்காகத்தான் என்று தெரியும். வேறொன்றுமே தெரியாது. முழுமையான அரசியல் சிந்தனைக் கலாசாரம்தான் இங்கே. மார்க்கம் இல்லை. மனிதாபிமானம் இல்லை. வார்த்தையில் புனிதம் இல்லை.

இந்தச் சூழலில் இலக்கியவாதிகளும் பிழைக்கப் போறானுகள் என்ற சந்தேகமும் வரத்தான் செய்யும். ஆனால் இந்நிகழ்வுக்கு ஊடகத்துறை அமைச்சர் வந்தால் ஊடகத்துறை தானாக இயங்குகின்ற நன்மை மட்டும்தான். இல்லாட்டி பத்திரிகையில் செய்தியைப் பார்ப்பது ரொம்ப கஷ்டம்.

மறு நாள் விழா நடப்பதற்கு இரண்டு மணித்தியாலங்கள் இருக்கின்றன.

அமீருக்கு ஊரின் அரசியல் பிரமுகரான றாசிக் சேரை அவசரமாய் சந்திக்கும் படி அழைப்பு விடுக்கப்பட்டது. கூட்ட ஏற்பாடுகள் சம்பந்தமான அழைப்பு. சின்னஞ் சிறு பருவ காலத்தில் பழகிய நண்பனின் அழைப்பு.

போகத்தான் வேணும். ஒரு தர்மசங்கடமான சமயம். தூர இடங்களிலுள்ளவர்கள் விழாவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டும் கெட்ட நேரத்தில் இந்த இடத்தை விட்டுப் போகத்தான் வேணுமா? போனா என்னதான் குறை. றாசிக் சேரின் பாட்டிக்கார அமைச்சர் வாரதால ஏதாவது ஒத்துழைப்பு கிடைக்கும். உறவைக் கூட புதுப்பிக்கலாம்.

அமைப்பின் பொருளாளர் அஷ்றப்பும் கூட, மோட்டார் சைக்கில் றாசிக் வீட்டை நோக்கி விரைகிறது. ஊரும் இயற்கையும் வழமைக்கு மாற்றமாய் புன்னகைத்தன.

வீட்டு வாசட்கடையில் ''பிக்கப்'' நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இரு காக்கியுடை அணிந்திருந்த பொலிஸ்காரர்கள் நிற்கிறார்கள். அவர்கள் முகத்தில் சிரிப்பும் இல்லை. முற்றத்தில் ஓங்கி வளர்ந்த பூக்கண்டுகள் நிற்கின்றன. அதில் இலைகளையோ பூக்களையோ காணவில்லை. கூட்டில் நாயொன்று முறைத்துப் பார்த்து வள் வள் என்று குரைத்தது. காலைத் துடைத்து விட்டு நுழையும் துடைப்புக் கூட தேய்ந்திருந்தது. அதில் காலைத் துடைத்து போனாலும் ஒன்று துடைக்காமல் போனாலும் ஒன்றுதான்.

வேலைப்பாடுகளுக்கு 'பிக்கப்' கேட்க வேணும். தூரத்திலிருந்து வாரவங்கள ஏத்தி இறக்கலாம். றாசிக் சேரையும் மேடையில் ஏற்றணும். அவர் கையால பொன்னாடை ஒன்றும் போத்தலாம். ஆனால் மறதியின் காரணமாக முன்பு கூப்பிடாத குறை ஒன்று உள்ளது. நெஞ்சுக்குள் மேடை அறிவிப்பாளரின் நிகழ்ச்சித் தொகுப்புகள். ஒலி வாங்கிக்கு முன்னால் அமைச்சர் மண்டபம் நிறைந்த சனங்கள், கைதட்டல்கள் விழா நடக்கின்ற மாதிரி. கௌரவிப்பாளர்களின் சந்தோசக் கடலின் அலை ஓசை மனதிற்குள்.

றாசிக் சேரின் முன் விறாந்தையிலுள்ள அலுவலகத்தில் இருவரும் அமர்ந்திருக்கிறார்கள். ''வந்திருங்கோ'' சேர் உள்ளே இருக்கின்றார் என்றான் அங்கிருந்த ஒருவன்.

றாசிக் சேரின் முகத்தில் சிரிப்பு இல்லை. இருவரையும் கண்டதும் பார்வை மாறுபட்டது.

''என்ன கூட்டம் குஞ்சடி நடத்திரீங்கடா அமைச்சர் வார கூட்டமல்லவா? தோரணம், பந்தல், பெனர், ஒன்றுமே ரோட்டிலே இல்ல. பொலிஸ் போமிசனும் எடுக்கல்ல. அமைச்சர் எதற்கு? அமைச்சரை வராமற் செய்வேன் ''

அமீர், அஷ்றப் இருவருக்கும் செருப்பால் அடித்திட்ட மாதிரி. சீச்சீ என்கின்ற அவமானக் காயம்.

'' மன்னிச்சிடுங்க சேர். முன்பின் தெரியாம ஏற்பாடு செய்து போட்டோம். தயவு செய்து அமைச்சரை மட்டும் வராது செய்திடாங்க ''

ஒரு டெலிபோன் கோல் போதும் அமைச்சர் வரமாட்டார். எதற்கும் சரி இரண்டு பெரிய பெனரை எழுதி, அவசரமாகப் போடு. ''

அமீருக்கு வீட்டை வாசலை ஏன் மிதித்தோமென்று இருந்தது. கூடிப்பழகின றாசிக்கில்லை கதைக்கு கதை கதைக்க நா வரண்டு விட்டது.

றாசிக் வீட்டை விட்டுக் கிளம்பி அவர் சொன்னவாறு செய்வதற்காய் இருவரும் வேகமாய் மோட்டார் சைக்கிலில் விரைந்தார்கள். ''என்ன மச்சான்... என்ன?''

மனதைக் கல்லாக்கிக் கொண்டு 'இனி அமைச்சர் வாராறென்றா அவசரமாய் இரண்டு பெனர் எழுதிப் போடனும் என்றான் அமீர்.

'' இன்று பேப்பர்ல டீவியில , வானொலியில, அமைச்சர் வருவதாகச் நிறையச் செய்திகள் கிடக்கு இன்னுமேன் பெனரும், விளம்பரமும் எதற்கு?

ஒன்றுமே ஓடவில்லை அவனுக்கு. தேர்தல் காலத்தின் அட்டகாசம் போன்று பயந்தான். '' நம்மட விளம்பரமே போதும்''

குழப்பத்தில் தடுமாறும் தலைவனின் கட்டளைக்கு அடிபணிந்து கருமம் ஆற்றும் செயலாளர் நியாஸ் தலையிடியும் மனம் பிரட்டுவதுமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். கொஞ்ச நேரத்தில் பித்த வாந்தி வந்தது. மீண்டும் நியாஸ் உசாரானார்.

''அமைச்சர் பங்குபற்றுவதாக பெரிய பொட்டெழுத்தில் போட்டிருக்காங்க. ஊருக்கு மட்டுமில்ல முழு இலங்கைக்கே உலகத்திற்கே நல்லாத் தெரியுது. பார்க்கப் போரீங்களா மச்சான்?

அவன் கதையை கணக்கில் எடுக்கவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''நல்ல சேவைகளையும், நல்ல செய்திகளையும் பிரசுரித்து ஊக்கப்படுத்த வேண்டியது பத்திரிகையாளர்களின் கடமை. தார்மீகப் பண்பு பந்தல் தோரணம் தேவை இல்லை. சில நிர்ப்பந்தங்கள் செய்யச் சொல்லுதே''

''நிர்ப்பந்தங்களுக்கு கண்ணு தெரியலல்லியமா. அமைச்சர் வாராரென்று''

''நினைச்சாப் போவதும் போவாம விடுவதும் தக்க சமயத்தில் கழுத்தறுப்பது அமைச்சர்கள்ர பணி மச்சான். நம்ம மாதிரி விழா ஏற்பாட்டாளர்களுக்கு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைதான் வெற்றி நடக்கிற வேலையைப் பாரு"

செயலாளருடன் உறுப்பினர்கள் பெளர் கட்டுவது கண்டு சகிக்க முடியாது நின்றான். அவனுக்குள் நரிக்கின் கதை மத்தி தெரிகிறது. அமைச்சர் வந்தால் ஒன்னு வராட்டி ஒன்னு. இனி நேரமில்ல. பெளரைக் கட்டாதே 'ஏற்பாட்டைக் கவனி' நியாஸ் என்றான்.

ஒன்றும் புரியாதவனாக தம் அலுவல்களைக் கவனிக்கச் சென்றான் நியாஸ். வழக்கம் போல சனம் வந்து கொண்டிருக்கிறது. கூட்டம் ஆரம்பிக்க இன்னும் பதினைந்து நிமிடங்கள். மண்டபம் நிறைந்த சனங்கள். அவனும் தனது பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். அமைச்சர் வராததால் சுதந்திரமாய் கூட்டம் நடைபெற்றது. உரைகள் யாவும் சுதந்திரமாய் இருந்தன.

***

## நிஜம்

முயல் + ஆமை
பந்தயக்கதை
படித்த துண்டு
பார்த்ததில்லை

மைதானம் ஒன்றில்
அறுவர் கொண்ட
இளைஞர் அணி
கட்டுடம்புக் காளைகள்
முஷ்டிகளை உயர்த்தி
முன்னுக்கு வந்தனர்

கயிறிழுப்போம் என்று
வீறாப்புப் பேசி
வீரமாய் நின்றனர்.

மாற்றுக் கட்சியோ
அறுவர் கொண்ட
கிழவர் கூட்டம்
தலை முடி நரைத்து
தாடி நெடுத்த
தளர்ந்த உடம்பினர்.

வேண்டாம் விபரீதம்
என்று வேண்டினர்.
நீங்கள் எங்களை
முதியவர் நாம்
வம்பு வேண்டாம்
என்று கெஞ்சினர்.

இளைஞர் அணியோ
அழுங்குப் பிடியாய்
ஆவேசம் கொண்டனர்.
வெற்றியின் விளிம்பில்
நிற்பதாய்க் கண்டனர்.

கூறிய புத்திகள்
விழலுக்கு இறைத்த
நீராய் மாறின.

கயிற்றோடு களத்தில்
இளைஞர் அணி.
இடுப்பிலும் ஒருவர்
இணைத்தார் கயிற்றை

பாவம்
கிழவர் கூட்டம்
மறுமுனை பிடித்து
முளியாய் முளித்தனர்.

நடுவர் ஊதினார்.
ஒன்று. இரண்டு
விநாடிகள் கழிந்தன.
முயல் + ஆமை
பந்தயக் கதை
நிஜமாய் நடந்தது.

வீழ்ந்தனர் மைனர்கள்
முதியோர் கால்களில்
முத்தமிட்டு எழுந்தனர்.

கரணமடித்தது
கதையளந்த
கறுப்பு முயல்
தலைமை முயலும்
அதுதான்

வெதும்பி நின்றது
வீறாப்புப் பேசிய
வெள்ளை முயல்

கீழே கிடந்தது
கயிற்றை இணைத்த
கிண்ணியா முயல்

மௌனமாய் நின்ற
மன்னார் முயல்
மண்டியிட்டது.

ஏனைய இரண்டும்
மல்லாக்காய் வீழ்ந்தன

வெட்கத்தால் நாணின.
வீறாப்புப் பேசிய முயல்கள்

ஆமைகளோ
ஆணவமின்றி
அமைதியாய்
நகர்ந்தன.

- அகத்திமுறிப்பான்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன அறபு இலக்கிய வரலாறு

D. அமானுள்ளாஹ்

பண்டைய அறபு இலக்கியம் ஒன்றுக்கொன்று காரணமாய் அமைந்த தொடர் நிகழ்ச்சிகளின் பரிணாமத்தில் புதுப்பாய்ச்சல்களையும் போக்குகளையும் தன்னகத்தே கொண்டு நவீன இலக்கியமாய் உருவெடுத்தது. சுதேச இலக்கியம் ஐரோப்பிய நாடகம், நாவல் முதலான இலக்கிய உருவங்களை உள்வாங்கி பழமை குன்றாது பொலிவடைந்தது.

நவீன அறபு இலக்கியம் என்பது நவீன அறபு உலகின் வரலாறாகும். அறபிகளின் ஆதிக்கம் சென்ற இடமெல்லாம் அறபு மொழியின் ஆதிக்கமும் மேலோங்கியது. 18ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சரிந்து போன அறபிகளின் உலக ஆதிக்கம் ஈராக், சிரியா, அறேபியா, எகிப்து, சூடான், மொரோக்கோ முதலாம் நாடுகளில் தொங்கிக் கொண்டிருந்தது. இக்காலப் பகுதியில் அல்லாஹ்வின் அருளால் நைல் நதியின் ஈரலிப்பில் நாகரிக சூரியன் உதயமாகியது. அறபு மொழி தன் வளர்ச்சியையும், இருத்தலுக்கான அடையாளத்தையும் இங்குதான் கண்டு கொண்டது. 1795ல் நெப்போலியன் எகிப்தை ஆக்கிரமித்ததன் தர்க்க ரீதியான விளைவாகவும் இதனைக் கொள்ளலாம்.

எந்த ஓர் இலக்கியத்தினதும் உண்மைத் தராதரம் அது மேற் கிளம்பும் சமூகத்தின் உணர்வாழங்களை பொறுத்தேயமையும். சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் கூட இத்தகையனவே.சிலப்பதிகாரம் கம்பராமாயாணம் முதலானவற்றின் இலக்கியச் செழுமை அவை உருக் கொண்ட சமூகத்தின் செழுமையையே காட்டுகின்றது. நவீன அறபு இலக்கியம், ஏகாதிபத்திய சுரண்டல்கள் இனசுத்திகரிப்பு, மதவெறி, முதலாம் ஆகிய அரக்கத்தனங்களிலிருந்து விடுதலை பெற முனையும் பின்புலத்தில் கருக் கொண்ட விடுதலை வேட்கையே. இம் மாபெரும் இலக்கிய சமுத்திரத்தில் ஒரு துளியை தொட்டெடுக்கும் முயற்சியே இக்கட்டுரை.

**பின்னணி,**

ஹிஜ்ரி 4ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி இஸ்லாமிய உலகுக்கு மாபெரும் தலையிடியைத் தந்தது. பிரிவினைகளும் கருத்து பேதங்களும் முற்றி ஒரு கொடியின் கீழ் நின்ற அறபு இஸ்லாமிய உலகு சிற்றரசுகளாகச் சிதைவடைந்தது. மேற்கிலும் கிழக்கிலும் அறபு இஸ்லாமிய நாடுகள் ஆட்டங் கண்டு அதிர்ந்து போயின. இது இவ்வுலக நாகரிகத்தில் பாரிய பின்னடைவையும் உறை நிலையையும் உண்டு பண்ணியது. சமூக, அரசியல், சிந்தனா ரீதியான பல காரணிகள் இந்நிலைக்குத் துணை போயின.ஹிஜ்ரி 5ஆம் நூற்றாண்டு, சிலுவை வீரர்கள் அறபு இஸ்லாமிய உலகை நோக்கி அதிரடித் தாக்குதல்களைத் தொடுத்தனர். மொரோக்கோ, ஸ்பெயின், சிரியா, எகிப்து போன்ற நாடுகளின் இரத்தவோட்டம் நின்று போனது. கிழக்கில் இஸ்லாமிய உலகை தம் கீழ் கொண்டு வர முனைந்த ஐரோப்பிய சமூகம் இப்போரினை முன் கொண்டு சென்றது. கிறித்தவர்கள் வெறுமனே நம்பிக் கொண்டிருக்கும் மஸீஹ் (அலை) அவர்களின் கப்ரைப் பாதுகாத்தல், தமது கோயில்கள் உள்ள பகுதிகளைக் காத்தல் போன்ற காரணங்களைக் கற்பித்துக் கொண்ட, பாப்பரசர் 2ஆம் எரியான் அறபு, முஸ்லிம் உலகுக்கு எதிரான போரினைத் தொடக்கி வைத்தார். ஐரோப்பிய அரசர்களையும் தலைவர்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டார். மத வெறியால் உந்தப்பட்ட கிறித்தவ சிலுவை வீரர்கள் தமது தலைகளிலும், நெஞ்சின் மீதும் சிலுவைகளைச் சுமந்து கொண்டு ஆவேசத்துடன் அறபு இஸ்லாமிய உலகின் மீது பாய்ந்தனர்.

சிலுவைப் போர்களுக்கு மதக்குரோதம் மட்டுமே காரணமன்று. ஐரோப்பிய கிறித்தவ அரசர்களுக்கு அறபு இஸ்லாமிய நாகரிகத்திலும் அதன் செல்வ வளங்களிலும் ஒரு கண் இருந்தது. வளம் கொழிக்கும் தேசங்களாக அறபு நாடுகள் திகழ்ந்ததாயினும் உட்பூசல்களால் அவை பலாஈனமடைந்த சந்தர்ப்பத்தில் கிறித்தவர்கள் தம் முழு ஆற்றலையும் பயன்படுத்தி அவற்றைச் சூறையாடினர். இவர்களுடன் எகிப்து, ஸ்பெயின், ஆபிரிக்கா, மத்தியதரைக் கடல் நாடுகளில் தருணம் பார்த்திருந்த கிறித்தவர்களும் இணைந்து கொண்டனர். இவ்வொட்டு மொத்த தாக்குதல்களால் முஸ்லிம்களின் படை பல தடவைகளில் தோல்வியைத் தழுவியது. காட்டு மிராண்டித்தனமான தாக்குதல்களுக்குட்பட்ட முஸ்லிம்களின் இரத்தம் ஆறாய்ப் பெருகியது. இஸ்லாமிய உலகின் இதயத்திலேயே காலனித்துவ அரசுகள் தோன்றின, வட ஈராக், சிரியா, பலஸ்தீன் பகுதிகளில் நிலை கொண்டன. சிரியாவின் பெரும் பகுதியை கட்டுப்பாட்டில் கொண்டு வந்த சிலுவையர்கள் முஸ்லிம்களின் மீது எகிறிப் பாய்ந்தனர். எகிப்து, வட ஹிஜாஸ் முதலியன இவர்களது கரங்களில் வீழ்ச்சியுற்றன. இஸ்லாத்தின் இதயத்தைத் தகர்த்தெறிய மக்கா, மதீனாவைக் கூட ஆக்கிரமிக்க முனைப்புக் கொண்டனர். பைத்துல் மக்திஸின் அரசன் பல முறை எகிப்தை எதிர்த்தான். கஃபாவைத் தரிசிக்க வரும் யாத்திரிகர்களின் வருகையை தடை செய்ய மிகுந்த பிரயத்தனம் மேற் கொள்ளப்பட்டது. மக்காவையும், மதீனாவையும் கைப்பற்ற செங்கடலில் கடற்படை ஒன்று நிறுத்தப்பட்டது. அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இப்புனித பூமிகளை பாதுகாக்கும் ஆற்றலை வழங்காது விட்டிருந்தால்!!

ஹிஜ்ரி 6ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியில் சிலுவையர்களின் கெடுபிடிகளிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் சுதந்திரப் போரில் இமாதுத்தீன் ஸன்கி இறங்கினார். மூஸல் பகுதியில் படையிறக்கி அர்ரிஹா நோக்கி நகர்ந்தார். அதனை முற்றுகையிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவப் படையை சிதறடித்து இஸ்லாமியக் கொடியைப் பறக்க விட்டார். இது முஸ்லிம்களுக்கு தெம்பை ஊட்டியது. இழந்து போன பூமிகளை மீளப் பெறும் உத்வேகத்தை அளித்தது. காலனித்துவ வாதிகளை சொந்த மண்ணிலிருந்து விரட்டிவிடும் சுதந்திரப் போர் வீரர்களாக்கியது. இம்மாற்றம் சிலுவையர்களை சிந்திக்க வைத்தது. கொலையும் கொள்ளையுமாய் ஆடல் பாடல்களில் மூழ்கி வெற்றிக் கொடி நாட்டிய இவர்களின் கன்னத்தில் விழுந்த அடி தன்னுணர்வைத் தட்டி ஆக்ரோசத்தைக் கிழப்பி விட்டது. துரித நடவடிக்கைகளில் இறங்கி தமது இருப்பை திடப்படுத்திக் கொள்ள அலை அலையாய்த் தாக்குதல்களை மேற் கொள்வதே தீர்வெனக் கண்டனர். இவர்களது முனைப்பில் வெற்றி வீரன் இமாதுத்தீன் ஸன்கி ஷஹீதானார். சிலுவையர் மரண விழாவெடுத்தனர். இதன் பின் ஸன்கியின் மகன் நூர்தீன் மஹ்மூத் சுதந்திரப் போருக்கு தலைமை தாங்கி ஈராக், சிரியா, எகிப்து முதலாம் நாடுகளில் மீண்டும் இஸ்லாத்தின் கொடியைப் பறக்கவிட்டார். டமஸ்கஸை மீட்டு அந்தாக்கியாவின் பெரும் பகுதியினை தன்னாதிக்கத்தில் கொண்டு வந்து, பைத்துல் மக்திஸை மையமாகக் கொண்ட கிறித்தவ அரசை ஆட்டம் காணச் செய்தார். இவருக்குப் பின் வெற்றி வீரன் ஸலாஹுத்தீன் அய்யூபி சிலுவையர்களுக்கெதிரான போரைத் தலைமை தாங்கி நடாத்திச் சென்றார். ஹித்தீன், பைத்துல் மக்திஸ் ஆகியன இஸ்லாத்தின் கொடி நிழலின் கீழ் வந்தன. அறபு இஸ்லாமிய உலகு இவரது வீரத்தையும் வெற்றிகளையும் புகழ்ந்து கவி மழை பொழிந்தது. சிரியா, எகிப்து பகுதிகளில் ஸ்தாபிதமான இஸ்லாமிய ஆட்சிக்கு ஐயூபியர்கள் தலைமை தாங்கினர். ஹிஜ்ரி 645 ல் எகிப்தின் மீது பிரான்ஸ் மன்னன் 9ஆம் லூயிஸ் பாரிய படையெடுப்பொன்றை மேற் கொண்டான். தூரான்ஸாஹ் தலைமையில் பதில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இப்போரில் மன்னன் சிறைப்பிடிக்கப்பட்டான். ஐயூபியரின் பின் மம்லூக்கியர் அறபு இஸ்லாமிய உலகின் கடிவாளத்தைக் கையேற்றனர். கிழக்கில் இவர்களை எதிர்த்து பெரும் புயலடித்தது. அறபு இஸ்லாமிய ஆட்சி அச்சுறுத்தப்பட்டது. தாத்தாரியர்களின் பெரும் படையெடுப்புக்களில் இஸ்லாமிய நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக வீழ்ந்தன. ஈற்றில் பக்தாத் ஹிஜ்ரி 656ல் இஸ்லாமியரின் கை நழுவிப் போனது.

மம்லூக்கியர் இஸ்லாத்தை மனமுவந்தேற்ற துருக்கியராவர். போர் வீரம் இவர்களிடம் பளிச்சிட்டுக் கிடந்தது. ஐயூபிய ஆட்சியாளர்கள் இவர்களை அறபு இஸ்லாமியத் தேசத்தை தூக்கி நிறுத்தும் தூண்களாகக் கண்டு தம் படைகளில் இணைத்த போது, பெரும் வீரர்களாகவும் தள கர்த்தர்களாகவும் உருவெடுத்தனர்.

ஹிஜ்ரி 648ல் சிரியா, எகிப்து தேசங்களை மம்லூக்கியர் ஆண்டனர். தாத்தாரிய சிலுவை யுத்தங்களில் இவர்களது வீரம் தெற்றெனத் தெரிந்தது ஹிஜ்ரி 656ல் பக்தாத் வீழ்ந்தமை முஸ்லிம்களின் உள்ளத்தை வாட்டியெடுத்தது. (இன்றும் அதே நிலைதான்) தாத்தாரியர் அங்கிருந்த நாகரிக சின்னங்களைத் தகர்த்தெறிந்தனர். நூற்கள் பற்றியெரிந்தன. உலகின் கலைக்கூடம் அரும் பொக்கிஷம் தன்னொளி இழந்தது.

மம்லூக்கியர் இஸ்லாமிய கிலாபத்தை மீளக் கட்டமைப்பதில் தீவிர கவனம் செலுத்தினர். இஸ்லாமியப் பொன்னாட்சியை கொணர, ஈராக்கின் அப்பாசிய ஆட்சியாளர் ஒருவரை அழைத்து வந்து எகிப்தில் முஸ்லிம்களின் கலீபாவாகப் பிரகடனம் செய்தனர். பள்ளிவாயல்களை அமைத்து வக்பு செய்தனர். மக்க, மதீன புனித தளங்களின் எல்லைகளை விஸ்தரித்தனர். பாடசாலைகளை நிறுவினர். ஹதீஸ் தொகுப்பும் ஆய்வும் ஊக்குவிக்கப்பட்டன. ஷரீஆவை அமுல் செய்து மக்களுக்கு நீதி வழங்கி சமூக மறுமலர்ச்சிக்கு உரமூட்டினர். இவர்களது ஆட்சியின் வீழ்ச்சிவரை அப்பாஸிய கலீபா இஸ்லாத்தின் சின்னமென கௌரவிக்கப்பட்டார்.

***

## வரமும் சிலுவையும் புரிந்து கொள்வோம்

பெண்களை தியாகத்தின் வளையிலிட்டு
பண்பாட்டின் கோலமாய் உருக்கி சிலையாகப் பத்திரப்படுத்தி
பலர் இங்கு வியந்து கொள்கிறார்கள்
பாசாங்காய் புகழ்ச்சியும் செய்கிறார்கள்.

பேதமையை அவள் இதயத்தில் பொறித்து
பெண் புத்தி பின் புத்தி என பிரசங்கமும் நிகழ்த்துகிறார்கள்.
பதியைத் தொழுதால் நினைத்தது கிட்டுமாம்
வரமும் தந்து சிலுவை ஏற்றுகிறார்கள்

இறந்தவனை வழியனுப்ப
இங்கிவள் இளமை தீக்குளித்து
பிறப்பின் உரிமைகளை வேரறுத்துக் கொள்கின்றது
புதிய கோலமும் அழகாய்ப் புனைந்து கொள்கின்றது

தசரதன் காம மொழி மறந்து
கைகேயை சபித்த பொல்லாத உலகு இது
பெண்மையின் உணர்வை எங்கு புரியும்?
ஆண்கள் விரித்த வலையை பெண்மை என்று களையும்?

மீண்டும் பிறந்து வந்து பாரதியும் நின்றுவிட்டால்
பெண்ணடிமை தீரவென்று
பாட்டுரைத்த என் மொழியும் சபையேறலையே என்று
சூளுரைத்துச் சீறி நிற்பாள் மை தொடுத்த கையுடனே!

கலாசார விலங்கறுத்து போலிகளைப் புறக்கணிக்கும்
பெண்மையொன்று மலருட்டும்
கோட்பாட்டுக் கோசங்களுக்கு
ஒலி இல்லை நிச்சியமாய்

புரிந்து நிற்போம் புரிய வைப்போம்
புதிய உலகு திறந்து வைப்போம்

அஸ்மியா ஏ வாஹிட்,
தமிழ் விசேட துறை, பேராதனை வளாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமேல் மாகாண முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள்

தொடர்: 03

இர்பானா அப்துல் லதீப் M.A.

அடுத்து, குருணாகல் மாவட்டத்தில் சிங்கள மக்கள் மிகப் பெரும்பான்மையினராக வாழும் அதே வேளை, தமிழ் மக்கள் சிறு தொகையினராகவும் தமிழ் பேசும் இஸ்லாமிய இனத்தவர்கள் கணிசமான அளவினராகவும் வாழ்கின்றனர். அதிலும் குறிப்பாக குளியாப்பிடிய, நிக்கவரடிய, தம்பதெனிய, கட்டுக்மபொல, பொல்கஹவெல, தொடங்கஸ்லந்த முதலான தேர்தல் தொகுதிகளிலேயே இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். பெரும்பான்மையினராக சிங்களவரையும், சிறுதொகையினராக தமிழர்களையும், கணிசமான அளவு இஸ்லாமியர்களையும் கொண்டதாக இம்மாவட்டம் விளங்கினாலும் புத்தளம் மாவட்ட மக்கள் போல் இவர்கள் அனைவரும் ஒருவருடன் ஒருவர் கூட்டாக வாழ்கின்றனர். இதனால் இம்மாவட்ட தமிழ் பேசும் மக்களின் பேச்சு வழக்கில் அரபுச் சொற்களும்,சிங்களச் சொற்களும் காணப்படுகின்றன.

இவ்வாறு இவர்கள் புத்தள மாவட்ட மக்கள் போல கூட்டாக வாழ்க்கை நடத்துகின்றனராயினும் தத்தம் இனத்துக்கே உரித்தான தனித்துவங்களை அவர்கள் இன்னும் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். மத ஆசாரங்களிலும், சமய அனுஷ்டானங்களிலும் எவ்வித இடையூறுகளும் இன்றித் தத்தமது கலாசார, பண்பாட்டு அம்சங்களைப் பின்பற்றி வருகின்றனர். இதற்கு இஸ்லாமியர்களும் விதிவிலக்கல்லர்.

பொதுவாக குருணாகல் மாவட்ட மக்களின் கல்வி நிலையை எடுத்து நோக்கும் பொழுது படித்தறியா பாமர மக்கள் முதல் அறிவுத் துறையிலே முன்னேற்றம் கண்ட பலதரப்பட்டவர்களையும் காண முடிகின்றது. விஷேடமாக பின்தங்கிய கிராமப் புறங்களிலே கல்வியறிவு குறைந்த பழமையில் ஊறிப்போன அனேகமான மக்களைக் காண முடிகின்றது. அறிவுத் துறையிலே ஓரளவு முன்னேற்றங் கொண்டவர்கள் அரசாங்கத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எழுதுவினைஞர் தொடக்கம் ஆசிரியர்கள், அதிபர்கள்,பகிரங்கச் சேவை உத்தியோகத்தர்கள், கல்வி அதிகாரிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள் எனப் பலதரப்பட்ட ஊழியர்களும் இங்கு வாழ்கின்றனர்.

மருத நிலச் சார்புள்ள இம்மாவட்ட மக்களின் பிரதான தொழில்கள் வேளாண்மைச் செய்கையும் தென்னை உற்பத்திச் செய்கையுமாகும். உழவுக் காலங்களிலும் அறுவடைக் காலங்களிலும் கிராமப் புறத்திலே வாழும் மக்கள் ஆண்களும், பெண்களுமாக வயல் வெளியை நோக்கிச் செல்வதையும் அங்கு ஒன்றாகக் குழுமியிருந்து வயலிலே வேலை செய்வதனையும் அவதானிக்கலாம். இவை தவிர, அநேகமான மக்கள் சேனைப் பயிர்ச் செய்கையிலும் கால்நடை வளர்ப்பு, நெசவு, மட்பாண்டம் செய்தல், ஓட்டுத் தொழில் , தச்சுவேலை முதலான தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். கணிசமான தொகையினர் ஆடு, மாடு, கோழி முதலான பண்ணை வளர்ப்புத் தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். சேனைப் பயிர்ச் செய்கைக்கும், பண்ணை வளர்ப்புக்கும் சிறந்த உதாரணங்களாக நிக்கவரடிய, கல்கமுவ, யாப்பகுவ முதலான தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கும் பிரதேசத்தைக் குறிப்பிடலாம். இவை தவிர நில அமைப்பை நோக்கின் மாநகர மையத்தில் ''மொனட் நொக்ஸ்"எச்சக் குன்றினைக் கொண்டு விளங்குவதனை அவதானிக்கலாம். இங்கு குளங்களும், நதிகளும் நீர்ப்பாசனக் கால்வாய்களை மையமாகக் கொண்டு விவசாய நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக அமைந்துள்ளன. அண்மைக் காலங்களில் குழாய்க் கிணறுகளின் உபயோகங்களும் அதிகரித்துள்ளன. இங்கு நெற் பயிர்ச் செய்கை இரு போகங்களாக மேற் கொள்ளப்படுகின்றது.

மேலும் குருணாகல் மாநகர மையமானது இலங்கையின் ஏனைய பகுதிகளைத் தொடர்புபடுத்தும் போக்குவரத்து குவி மையத்தைக் கொண்டு விளங்குவது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலத்தில் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் நிலப் பயன்பாடானது மாற்றமடைந்து வருவதை அவதானிக்கலாம்.

இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்றான தென்னையே இங்கு பிரதான உற்பத்திப் பொருளாகும். குருணாகல் மாவட்டம் சிறப்பாகத் தென்னை முக்கோண நிலையத்துக்குட்படுத்தப்பட்டிருக்கிறது. தென்னை உற்பத்தியில் மிகவும் பிரபல்யமானதும் பெயர் பெற்றதுமாக இம்மாவட்டம் விளங்குகின்றமை உண்மையிலேயே பெருமைக்குரியதாகும். அதே வேளை இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆங்காங்கே கோப்பி, கொக்கோ, வாழை, கமுகு முதலானவற்றின் உற்பத்தியும் காணப்படுகின்றது. இவ்வாறு புத்தளம், குருணாகல் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய வடமேல் மாகாணத்தில் சமூக, பொருளாதார நிலமைகள் காணப்படுகின்றன.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் புலவர்கள் வரிசையில் இலங்க மஸ்தார் பாடல்கள்
## - ஓர் இலக்கியப் பார்வை.

முபீஸால் அபூபக்கர்
மெய்யியல் விசேடதுறை- பேராதனை வளாகம்

இலங்க மஸ்தார் என்ற புனைப் பெயர் கொண்டு அழைக்கப்பட்ட ஏ.எம்.இப்றாஹீம் என்ற கவிஞர் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக கல்முனைப் பிரதேசத்தில் மிகவும் பிரபல்யமான ஒருவராவார். இவர் சிறு வயதிலேயே வர கவியாய் பாடல்கள் இயற்றவும், அவற்றை மெட்டமைத்துப் பாடவும் ஆற்றல் பெற்றிருந்தார். தனது சூழலையும் சமூகத்தின் குறைபாடுகளையும் யுத்தத்தின் கோர விளைவுகளையும் கருவாகக் கொண்டு பல்வேறு பாடல்களையும் கவிதைகளையும் இயற்றியுள்ளார். இவரது பாடல்களின் தனிச்சிறப்பு அதில் அறபு கலந்த சொற்களையும் மற்றும் மக்களது அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் வட்டாரச் சொற்களையும் கோவையாக்கி அவற்றின் மூலம் பாடல்களை வெளிக் கொணர்ந்தமையாகும். இலங்க மஸ்தாரின் பாடல்கள் உயர்ந்த உள்ளர்த்தங்களைக் கொண்டிருப்பதுடன் அவ்வக்கால சமூகத்தின் சிக்கல்களுக்கான தீர்வுகளையும் கூறுபவையாக அமைந்தன.

பல்வேறுபட்ட பாட்டுகளையும் கவிதைகளையும் தந்து 75 வருடங்களுக்கு மேலாக தன் கவி ஊற்றுக்களால் சமூகத்தின் உள்ளங்களை குளிர வைத்ததனால் கல்முனை இலங்க மஸ்தார் இரசனை விழாக் குழுவினரின் ஏற்பாட்டில் தென்கிழக்கு பல்கலைக்கழகப் பீடாதிபதி கலாநிதி கே.எம்.எச்.காலிதீன் அவர்களால் 18.8.2000 ஆம் ஆண்டு 'இறையருட் கவிராயர்' என்ற பட்டமும் பொன்னாடையும் போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். பாட்டுகள் மூலம் பல பரிசில்களையும் பெற்ற இவர் உண்மையில் தென்கிழக்குப் பிரதேசத்தின் சொத்தாக மதிக்கப்பட வேண்டியவராக இருந்ததோடு கல்முனை மண்ணின் சிறந்த விகடகவியாகவும் திகழ்ந்தார். இவர் பற்றிய பல்வேறு விகடத் துணுக்குகள் இதற்கு ஆதாரமாக உள்ளன. இவ்வாறான இலங்க மஸ்தார் அவர்கள் அக்கால புரவலர்களின் உதவி கொண்டு தான் முன்னின்று உழைத்து பல்வேறு குர்ஆன் மத்ரஸாக்களை உருவாக்கி அவை ஒவ்வொன்றினதும் ஆரம்ப உஸ்தாதாகவும் இருந்து பணியாற்றியவர்.

இயல்பிலேயே மார்க்கப்பற்று அதிகம் கொண்ட அவர் குணங்குடி மஸ்தான் மற்றும் தரீக்காக்களின் வழிவந்த பெரியார்களின் மீது அதிக பற்றுக் கொண்டவராய் இருந்ததுடன் தன் சொந்த வாழ்க்கையையும் ஓர் துறவி போலவே அமைத்துக் கொண்டதுடன் இவ்வுலக வாழ்வை 17.12.2002 இல் முடித்துக் கொண்டார்.

இவர் நூற்றுக் கணக்கான பாடல்களை பாடியிருந்தாலும் அவற்றின் நூல் வடிவமாக இரசனை என்ற நூல் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது. இங்கு முஸ்லிம் புலவர் வரிசையில் இவரது ஒவ்வொரு பாடல்களையும் நயந்து மகிழ்வோம். முதலில் மாணவ மணிகளே! என்ற பாடலை நோக்குவோம்.

பள்ளிக் கூடப் பிள்ளைகளே சொல்லித் தரும் கல்விகளை
நல்லதென்றால் எடுத்திடுங்கோ இல்லதென்றால் தடுத்திடுங்கோ
(பள்ளிக் கூடப்)
தந்தை தாயின் சொல்லைக் கேட்டு வீட்டிலிரவில் படிக்க வேணும்.
மௌலவி சொல் மாஸ்டர் சொல்லும் கேட்டறிந்து படிக்க வேணும்.
உற்றுணர்ந்து மானமௌனம் கோட்டின் நடை படிக்க வேணும்
மற்றவர்கள் நம்மைக் கண்டு மார்க்கம் கேட்டுப் படிக்க வேணும்
(பள்ளிக் கூடப்)
கலைகளிலே அதிக பாஷை உலகில் உண்டு படிக்க வேணும்
அலிப், ஆனா, அயன்னா, ஏயும் முன் அன்புடன் படிக்க வேணும்
விலையுயர்ந்த கல்வியுண்டு கணக்கறிந்து படிக்க வேணும்.
கலைகளிலே நாம் உணர்ந்து உடல் நிலையும் படிக்க வேணும்
(பள்ளிக் கூடப்)
விபரம் பக்தி சுகாதாரமும் விளையாட்டில் வெற்றி படிக்க வேணும்
தரமுயர்ந்து தன்னை அறியும் தத்துவங்கள் படிக்க வேணும்
மறை புர்கான் வேதம் கிதாப் கருத்தையும் படிக்க வேணும்
இறையோனருள் அடைக்கலமாய் குரு மொழியாய் படிக்க வேணும்
(பள்ளிக் கூடப்)

இப்பாடல் வரிகள் மூலம் பள்ளிப் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறும் மஸ்தான் அவர்கள் அவற்றினை கட்டுப்படுத்தாது நல்லனவானால் மட்டுமே எடுத்து நடக்கவும் இல்லையேல் ஒழிக்கவும் வேண்டும் என்கிறார். இதன்படி அவர் தான் கூறுவது என்பதனால் அவையெல்லாம் நல்லதென எண்ணக் கூடாது, பகுத்தறிந்து பார்க்க வேண்டும் என்ற பாணியில் தன் அவை அடக்கத்தை வெளிப்படுத்துகிறார். இன்னும் பிள்ளைகள் தமது கல்வியை வீட்டிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்பதனால் முதலில் பெற்றோரின் சொல் கேட்க வேண்டும் என்கிறார். அத்தோடு மார்க்கக் கல்விக்காக மௌலவிமார்களின் அவசியத்தோடு ஆசிரியரின் சொற்படி நடக்க வேண்டும். இதன் மூலம் மார்க்கத்தை முதன்மைப்படுத்துகிறார். அத்தோடு மானம் என்பதை ஓர் கோடு எனவும் ஒப்பிட்டு அக்கோட்டிலிருந்து தவறிவிடக் கூடாதெனவும் ஏனையோருக்கு முன்மாதிரியாக மார்க்க விடயத்தில் நடக்க வேண்டும் எனக் கூறி சிறு வயதிலேயே கவிஞர் பிள்ளைகளின் மனதில் பதிக்கின்றார்.

கல்வியோடு மொழித்தேர்ச்சியும் அவசியம் அதன் படி அவர் அனைத்து மொழிகளையும் கற்க வேண்டும் என்கிறார். அதில் எமது மார்க்க மொழியான அறபை முதன்மைப் படுத்துவதோடு தமிழிலும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் புலமை வேண்டும் என உணர்த்துவதோடு காசுகொடுத்துக் கற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கற்கைகள் பல உண்டு எனவும் அவற்றில் சிலவற்றை தேர்ந்து கற்க வேண்டும். இன்னும் நாம் கற்கும்போது எமது உடல் நலத்தை கெடுத்துக்கொள்ளும்படி கற்கக் கூடாது எனவும் வேண்டுகிறார். இவ்வாரான நிலமைகள் மூலம் கவிஞர் தனது ஆழமான கருத்தை குறித்த சில வரிகளிலேயே தெளிவு படுத்திக் கூறுவதை அவதானிக்க முடிகின்றது.

விளையாட்டையும் சுகாதாரத்தையும் கல்வியாக காணும் அவர் விளையாட்டில் வெற்றிதோல்வியைப் படிக்க வேண்டி வரும் என்கிறார். இன்னும் தன்னை உயர்த்திக் கொண்டு தன்னை அறியும் தத்துவத்தை படிக்க வேண்டும் என்கிறார். இது கிரேக்க தத்துவஞானியான சோக்கிரடிஸின் 'உன்னையே நீ அறிவாய்' என்ற முதன்மை வாக்கியத்தை சார்ந்ததாக அமைகிறது. இத்தோடு எமது வேதமான புர்கான் மற்றும் மார்க்க கிதாபுகளின் கருத்துக்களையும் படித்து தெளிவு பெற வேண்டும் என்கிறார். அனைத்துக்கும் மேலாக இவை அனைத்தும் எமது சுய முயற்சி எனக் கொள்ளாது அவை ஓர் இறை அருளாகும். அவற்றை அடக்கமான முறையில் குருபக்தியுடன் கற்க வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார்.

-தொடரும்-

# சீமாலியின் கதை

கறுவாத் தோட்டத்து
'பெரியவ'ரின் பங்களாவில்
பிள்ளை பார்க்க ஆயாவாய்
கொழும்புக்குப் போனாய் நீ

இதழினிலே புன்முறுவல்
கண்ணிரண்டில் பளபளப்பு
முகமலரில் விகசிப்பு
கொழும்புக்கு நீ போனாய்.

மூன்றாண்டு சென்றதன்பின்
கருஞ்சேலை ஒன்றணிந்து
வீட்டுக்கு நீ வந்தாய்,
சிசுவொன்றை உடன் சுமந்து

பெண்ணே நீ போகையிலே
பூத்துக் குலுங்குகின்ற
பேராதனை போலிருந்தாய்,
பெண்ணே நீ வருகையிலே
சிதைந்தழிந்து போயிருக்கும்
அனுராதபுரம் போலுள்ளாய்

*சிங்களமொழியில்: பராக்கிரம கொடிதுவக்கு*
*தமிழில்: லறீனா ஏ.ஹக்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

# பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் சமூக நாடகங்கள்

(நானாடகம் இரு நாடகம் தொகுதிகள் அடிப்படையிலான ஒரு ( 'ாக்கு)

- கலாநிதி துரை மனோகரன் -

சுவாமி விபுலானந்தருக்குப் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்துறைப் பேராசிரியராக விளங்கி, அதனை இருபத்தொன்பது ஆண்டுகளாக அணி செய்தவர் போராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள். ஆய்வாளராகவும், கவிஞராகவும், கதாசிரியராகவும், மொழி பெயர்ப்பாளராகவும் விளங்கிய அவர், நாடகத்துறைக்கும் அளப்பரிய பணி புரிந்தவராவார்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் பல்வேறு ஆக்க இலக்கிய முயற்சிகளுள், அவர் நாடகத் துறைக்காற்றிய பங்களிப்பே விதந்துரைக்கத்தக்கதாக விளங்குகிறது. நாடகமே அவரது உள்ளார்ந்த ஆற்றல் முழுவதையும் வெளிக்கொணர்ந்த சாதனமாக அமைந்தது. நாடகத் துறையில் அவரது சாதனையாக விதந்து குறிப்பிடத்தக்கது. பேச்சுவழக்கை அதன் இயல்பறிந்து நாடகம் முழுவதிலும் புகுத்தியமையாகும். கொச்சை மொழி எனக் கருதி, நாடகங்களில் வேலைக்காரர் போன்ற சிறு பாத்திரங்களுக்கு மட்டுமே நகைச்சுவை நோக்கிற் பயன்படுத்தப்பட்டு வந்த பேச்சுவழக்கை, தமது நாடகப் பாத்திரங்கள் அனைத்திற்கும் பயன்படுத்தியதன் வாயிலாகப் பேராசிரியர் ஒரு முன்னோடியாக விளங்குகிறார். அதற்கு அவர் பெற்றிருந்த மொழியியல் அறிவும் ஒரு முக்கிய காரணமாகும். பேராசிரியர் தமது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை இங்கிலாந்தில் நிகழ்த்தி வந்த போது, பேர்னாட் ஷாவின் நாடகங்களையும் பார்வையிடும் வாய்ப்பும் அவருக்கு இருந்தது. இத்தகையதொரு வாய்ப்பும் அவரது நாடக எழுத்தாக்கப் பணிக்கு உறுதுணையாக அமைந்தது எனலாம். யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறையில் தும்பளை என்னும் கிராமத்தைச் சேர்ந்த அவர், அப்பிரதேசப் பேச்சுவழக்கையே தமது நாடகங்களிற் புகுத்தினார். அவரது நாடகங்கள் பேச்சுவழக்கில் எழுதப்பட்டமையை விரும்பிய சுவாமி விபுலானந்தர், அவருக்கு எழுதிய கடிதமொன்றில் ''மட்டக்களப்பு வழக்கு மொழியினையும் ஓரிரண்டு நாடகங்களிலே படம் பிடித்து வைப்பது நன்று'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை எட்டுச் சமூக நாடகங்களையும், ஒரு வரலாற்று நாடகத்தையும் எழுதியதோடு ஒரு வடமொழி நாடகத்தையும் தழுவி எழுதினார். சமூக நாடகங்கள் எட்டினுள், ஆறு நாடகங்கள் நானாடகம், இரு நாடகம் என்னும் இரு தொகுதிகளாக நூல் வடிவம் பெற்றுள்ளன. இவையும், சுந்தரம் எங்கே?, துரோகிகள் ஆகிய சமூக நாடகங்களும், அவரது பிற நாடகங்களும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை நாடகத்திரட்டு (2003) என்ற நூலில் இடம் பெற்றுள்ளன. அவர் எழுதிய ஈழ வரலாற்று நாடகமாகச் சங்கிலி விளங்குகின்றது. வட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியிலுள்ள ரத்தினாவலி என்னும் நாடகத்தை மாணிக்கமாலை என்னும் பெயரில் அவர் தழுவி எழுதினார்.

நாடகம் பற்றிப் பேராசிரியர் கொண்டிருந்த கருத்துக்கள் மனங்கொள்ளத்தக்கவை. ''நாடகம் என்பது உலக இயல்பை உள்ளது உள்ளபடி காட்டுவது. ஆகவே வீட்டிலும் வீதியிலும் பேசுவது போலவே அரங்கிலும் ஆடுவார் பேசல் வேண்டும்'' என்று நாடகம் பற்றிய தெளிவான சிந்தனையை அவர் கொண்டிருந்தார். இதன் மூலம், இயற்புண்ணுவாத நெறியைத் தமது நாடகப் படைப்பாக்கத்திற் கொண்டிருந்தார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

அவரது நானாடகம் (1940) என்ற தொகுதியில் உடையார் மிடுக்கு, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, நாட்டவன் நகர வாழ்க்கை ஆகிய நான்கு நாடகங்கள் இடம் பெற்றுள்ளன. அவர் நாடகங்களில் யாழ்ப்பாணத்து மரபுகளும்,பழக்கவழக்கங்களும், அம்மக்களின் பலமும் பலவீனமும் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்துச் சமுதாயத்தினை அதன் அடிமட்டத்திலிருந்து உணர்ந்து கொண்டவர் ஆசிரியர் என்பதை இத்தொகுதியிலுள்ள நான்கு நாடகங்களும் புலப்படுத்துகின்றன.

உடையார் மிடுக்கு என்ற நாடகத்தில் யாழ்ப்பாணத்தில் அவர் காலத்தில் உடையார்கள் தமது பதவியினால் கிடைத்த அந்தஸ்து, செல்வாக்குக் காரணமாக தலைக்கனம் கொண்டு பிறரை மதிக்காமல் நடந்து கொள்வதையும், அவர்களது நடையுடை பாவனைகளையும் உடையார் என்ற பாத்திரம் மூலமாகப் புலப்படுத்துகின்றார். அதேவேளை, நாடகத்தினூடாகத் தமது கருத்துக்களையும் பார்வையாளர்களுக்கு அல்லது வாசகர்களுக்கு நாடக ஆசிரியர் சூசகமாக உணர்த்துவதையும் காண முடிகின்றது. குறிப்பாகக் உயர்வர்க்கச் சமூகப் போக்குக்கு எதிரான தமது கருத்தை நாகம்மா என்ற பாத்திரம் மூலமாகப் பேராசிரியர் முன்வைத்துள்ளமையைச் சுட்டிக் காட்டலாம்.

''பெட்டைக்கு விருப்பமில்லாத இடத்திலை ஒண்டும் செய்யக் கூடாது. காசுக்காரன் எண்டாப்போலை செய்யிறதோ? நாய் தின்னாக் காசு.... கை நிறைஞ்ச பொருளிலும் கண்ணிறைஞ்ச கணவனையல்லோ ஒருத்தி தேடுவாள். ஒரு நாளும் பலவந்தப்படுத்தி கல்யாணம் செய்யக் கூடாது. அதாலை பெரிய கெடுதி வந்து சேரும்''

ஈற்றில் உடையார் தமது மிடுக்கு அழிந்து திருந்துவதை நாடகம் சுவைபட விளக்குகின்றது. முருகன் திருகுதாளம் என்ற நாடகத்தில் நகைச்சுவையே முக்கியத்துவம் பெற்றிருப்பினும், யாழ்ப்பாணத்தின் மண் வாசனையை அதிலும் நுகர முடிகின்றது. யதார்த்தப் போக்கு இந்நாடகத்திற் குறைவாகவே காணப்படுகிறது. இந்நாடகத்தில் பேராசிரியர் சோமசுந்தரத்தையும், ஆராய்ச்சி மாணவன் சுப்பையாவையும் தவிர்ந்த ஏனைய பாத்திரங்கள் ஓரளவு உண்மை மாந்தர்களாக உலாவுகின்றனர். பதவியும், பொருளும் உள்ள ஆணுக்கு அவன் எப்படியிருந்த போதிலும், எப்படியாவது தமது மகளைக் கொடுத்துவிட வேண்டுமென்று விரும்பும் மக்களின் மனப்பாங்கை ஆசிரியர் திறம்பட எடுத்துக் காட்டுகிறார். இந்நாடகத்தில் தாய்ப்பாத்திரத்தை எந்தளவுக்கு யதார்த்தபூர்வமாகப் படைக்க இயலுமோ அந்தளவுக்குச் சிறப்பாக நாடகாசிரியர் படைத்துள்ளார்.

கண்ணன் கூத்தின் கதையமைப்பிற் சிறிதளவு செயற்கைத் தன்மை காணப்படினும், ஆசிரியரின் சமூக போக்கு நன்கு பளிச்சிடுகின்றது. அந்நாடகத்தில் இடம் பெறும் சண்முகம் என்ற பாத்திரத்தின் வாயிலாக யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பைத் தெளிவாக உணர்த்துகின்றார்.

''உனக்குத் தெரியுமோ தெரியாதோ. எனக்குத் தெரியவில்லை, மோனை வல்லிபுரம், நீ நான் பெத்த பிள்ளைக்குச் சரி. உந்தச் சாதியெண்ட விசயத்திலை ஒரு விதமான ஐமிச்சமும் படவேண்டாமெண்டு அவையெட்டைச் சொல்லிப்போடு. நாங்கள் உங்கினை உள்ள வீடுகளிலை செம்புத் தண்ணிகூடத் தூக்கியறியம். நாங்கள் ஆர் பக்கமெண்டு உனக்குத் தெரியுமே?''

அதே வேளை, நாகரத்தினம் என்ற பெண் பாத்திரம் வாயிலாகத் தமது உள்ளக்கருத்தினை ஆசிரியர் புலப்படுத்துகின்றார். ''ஆனால் ஒண்டு சொல்றன் கேளுங்கோ. உந்தச் சாதி வரமெல்லாம் இந்த நாளையிலை பாக்கேலாது. உதுதான் இருக்கிற தொந்தரவு'' என்ற அப்பாத்திரத்தின் கூற்று ஆசிரியர் கருத்தாக விளங்குகின்றது. சண்முகம் சாதிக் கட்டுப்பாட்டின் காரணமாகத் தமது மகனையும்,மருமகளையும், பேரப்பிள்ளையையும் பிரிய வேண்டி ஏற்பட்டமையையிட்டு வேதனையுற்றுக் கண்ணனிடம் கூறும் கட்டங்களும், வல்லிபுரக் கோயிலில் வீட்டாருக்குத் தெரியாமல் ரகசியமாகப் பேரப்பிள்ளையின் பெயரில் அர்ச்சனை செய்விப்பதும் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பு நெகிழத் தொடங்கிவிட்டது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. யாழ்ப்பாணத் தமிழர் மலையகத் தமிழர் பற்றிக் கொண்டிருந்த தவறான கருத்துக்களையும் சந்தர்ப்பம் வாய்த்த போது பாத்திர வாயிலாக ஆசிரியர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

கொழும்பையும், பருத்தித்துறைப் பகுதியில் ஒரு கிராமமான தும்பளையையும் கதை நிகழிடங்களாகக் கொண்டு, நாட்டவன் நகரவாழ்க்கை என்ற நாடகத்தைப் பேராசிரியர் படைத்துள்ளார். யாழ்ப்பாணத்துச் சமுதாயப் பின்னணி சிறப்பாக இந்நாடகத்திற் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதே வேளை, நாட்டின் அக்கால அரசியல் நிலையையும் நாடகத்தினூடாகப் புலப்படுத்தப்படுகின்றது. முந்திய காலத்துச் சட்டசபைத் தெரிவு நிலைமையையும், தமது காலத்து நிலைமையையும் தேர்தலில் நிற்கும் சங்கரப்பிள்ளை என்ற பாத்திரத்தின் மூலம் ஒப்பிட்டுக் காட்டும் ஆசிரியர், நாட்டில் அரசியல் நிலையும், சமுதாய நிலையும் காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டு செல்வதையும் உணர்த்துகின்றார். பேராசிரியர் கணபதிப்பிள்ளை தமது காலத்தினதும், அதற்கு முந்திய காலத்தினதும் சமுதாயப் போக்குகளையும், மரபுகளையும் அதே சங்கரப் பிள்ளை என்ற பாத்திரம் வாயிலாக ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

''இதெல்லாம் இந்தப் படிப்பும் உத்தியோகமும் செய்த வேலை, அந்த நாளையில சோறு தின்னிறது அம்மாசை பருவத்துக்கு பின்னை, மற்ற நேரமெல்லாம் தினை,சாமி, ஒடியல்புட்டு, பினாட்டு இதுதான் சாப்பாடு. முன்னுள்ளவன் என்ன மாதிரியான பிலசாலியாக இருந்தான். இப்ப சம்பா அரிசியைத் திண்டுதிண்டு சலரோகம் வேண்டினதுதான் மிச்சம். இந்தப் புது மோடியான சீவியஞ் செய்யப் போய்த்தானே யாழ்ப்பாணத்தான் வரவரக் கீளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறது...''

யாழ்ப்பாணத்துச் சமூகத்தவர் மத்தியில் நிலவும் பல்வேறு நம்பிக்கைகள், கருத்துக்கள் பற்றியும் நாடக ஆசிரியர் சந்தர்ப்பம் கிடைக்கும் தோறும் எடுத்துக் காட்டுகின்றார். நோயுற்றுப் படுத்திருந்த விசாலாட்சியை ''வருத்தம் பார்க்க'' வந்திருந்த வள்ளியார், ''பாதியும் இந்தப் பெட்டைக்கு நாவூறுதான். எடிமோனை சிவகாமி, கொஞ்சம் வேப்பம் இலையும், இரண்டு மிளகாய்ச் செத்தலும் எடுத்துக் கொண்டாடி. இண்டைக்கு வெள்ளிக் கிழமை. ஒருக்கா நாவூத்துக்குப் பாத்து விடுவம்'' என்று கூறி, விசலாட்சியின் தலைமாட்டில் அரை ரூபா வைரவருக்கு நேர்ந்து முடிந்து விடும்படியும் கூறுகிறாள். நோயாளர் இருக்கும் இடத்தில் கூட்டங்கூடிப் பேசிக் கொண்டிருக்கும் மக்களின் பழக்கத்தை வேலுப்பிள்ளை என்ற பாத்திரத்தின் மூலமாக ஆசிரியர் கண்டிக்கின்றார். மேலும், நோயாளியை வைத்தியரிடம் காட்டுவதற்கும் நாள் பார்த்துச் செல்லும் அக்கால யாழ்ப்பாண மக்கள் சிலரது வழக்கத்தையும் ஆழ்வார் என்ற பாத்திரம் வாயிலாக ஆசிரியர் உணர்த்துகின்றார். இந்நாடகத்தின் ஒரு காட்சியில் ஒரு மர நிழலில் வள்ளியார் என்ற பாத்திரம் பனங்காய்ப் பணியாரம் விற்றுக்கொண்டிருப்பது பேராசிரியர் கால யாழ்ப்பாணத்துப் பின்னணியைக் காட்டுகின்றது.

பேராசிரியரின் இரு நாடகம் (1952) என்னும் தொகுதியில் பொருளோ பொருள் அல்லது கார்த்திகேயன் வீழ்கை, தவறான எண்ணம் ஆகிய நாடகங்கள் இடம் பெற்றுள்ளன. முதல் நாடகம், உறவினரிடையே பொருளால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைப் பிரதிபலிக்கிறது. கார்த்திகேசு, சின்னத்தங்கம், இராசம்மா, வள்ளியம்மை, கமலவேணி, வடிவேலு முதலிய பாத்திரங்கள் சமுதாய இயல்புக்கேற்பச் சித்தரிக்கப்பட்டுள்ளன. கார்த்திகேசுவினதும், மகள் கமலவேணியினதும் ஆரம்ப மனப்பாங்குகளும் சமுதாயப் பின்னணியிற் காட்டப்பட்டுள்ளன. மங்கையர்க்கரசி, தாமு ஆகிய பாத்திரங்கள், கார்த்திகேசு குடும்பத்தின் இருவேறு தன்மைகளையும் சமுதாய அடிப்படையில் இனங்காட்டுகின்றன.

தவறான எண்ணம் என்னும் நாடகம் இலங்கையின் அரசியல் போக்கையும், அதனோடு இணைந்த மக்களின் செயற்பாடுகளையும் காட்டுகின்றது. சுருங்கக் கூறின், இந்நாடகத்தில் இலங்கையின் அரசியல் நிலையை ஆசிரியர் விமர்சனம் செய்துள்ளார். அரசியல்வாதிகளின் போலித்தனத்தையும், சந்தர்ப்பவாதத்தையும் பொருந்துமிடமெல்லாம் ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார். இந்நாடகத்தில் முதற்காட்சியில் அப்புக்காத்துமார் (சட்டத்தரணிகள்) சாட்சிகளை எவ்வாறு பயிற்றுவிக்கின்றனர் என்பதை நாடகாசிரியர் நகைச்சுவையுடன் காட்டிச் செல்கின்றார். பேராசிரியர் தமது கால இலங்கையை சிறப்பாக யாழ்ப்பாணத்தை தவறான எண்ணம் நாடகத்திற் பிரதிபலிக்க முயன்றுள்ளார். சில பெண்களின் விபரீதமான போக்கைச் சுந்தரநாயகி, வசந்தநாயகி என்ற பாத்திரங்களின் மூலமாக அவர் சுட்டிக் காட்டுகிறார். இந்நாடகத்தில் மலையகத் தமிழரை பிரதிநிதித்துவப்படுத்தும் மாணிக்க தேவர் (கோப்பிக்கடைக்காரர்) என்ற பாத்திரம், பேச்சுவழக்கைப் பொருத்தவரையில் மற்றைய பாத்திரங்களின் அளவுக்குச் சிறப்பாக வார்க்கப்படவில்லை. பேராசிரியர் காலத்தில் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் காணப்பட்ட இஞ்சிப்பத்தர் (இன்ஸ்பெக்ரர்), டேசன் (ஸ்ரேஷன்), இறைவர் (டரைவர்), அப்பிராணியன் (அப்பாவி) முதலான சொற்களை ஆசிரியர் நாடகத்திற் புகுத்தியுள்ளார்.

பேராசிரியர் அவர்கள் தமிழ் நாடகத்துறையோடு தம்மை இணைத்துக் கொண்ட காலப்பகுதியில் இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் பல்வேறு நாடகங்கள் மேடையேறியுள்ளன. அவற்றோடு அவரது நாடகங்களை ஒப்பிடும் போது, பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஒரு சிறந்த நாடக ஆசிரியராகத் திகழ்ந்துள்ளார் என்பது தெளிவாகிறது. அது மட்டுமன்றி, நாடகத்துறைக்கு ஒரு முன்னோடியாகவும் அவர் விளங்கியுள்ளார். பல்கலைக்கழக மாணவரைக் கொண்டு மேடையேற்றப்பட்ட அவரது நாடகத்துறை வெற்றிக்கு அடிகோலியது: அவரிடம் ஆழப்பதிந்து அகன்று விரிந்த சமுதாய நோக்கே என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் கடந்த கால யாழ்ப்பாணச் சமுதாயம் பற்றிய வரலாற்று ஆவணங்களாக விளங்குகின்றன.

***

---

இழுத்தி ,போர்த்திக் கூட
படுக்க அவ்வளவு,
விருப்பமில்லை

நல்ல மழைதான்!
மரவள்ளிக் கிழங்கும்
மாட்டுக் குடலுக்கும்
பொருத்தமான மாரிதான்

நெடும் காலமாக
நமக்குச் சொந்தமான
வானத்து மழை,
கிடைக்காததுதான்,
பெரும் குறை.

ஊதார்,
கூரையின் கீழ்தான்,
இப்போகத்து மாரியும்.

வானம்,
அள்ளி அற்றி
வாடகை வளவெல்லாம்,
பெரு வெள்ளம்.

வெட்டிக் குத்தி,
வெள்ளத்தை
வழியனுப்ப வட்டாரத்தில்
யாருமில்லை

குந்தி, இருக்க
குடும்பத்தோடு,

மழைக் காட்சி பார்க்க,
சொந்த நிலமா இது?

இங்கு,
வந்து போகும்,
இடி, மின்னலும்
எங்கள்,
வீட்டு முற்றத்தில்
குந்தி விட்டுத்தான்
வந்திருக்கும்.

பீ ஆமைக்கு
பெரு வெள்ளம்,
பெருநாள் மாதிரி!
எடுத்து வீசி
சாக்குத் துண்டை
கால் விறைக்குது.

முஹம்மட் ஜபார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19ம் நூற்றாண்டில் முஸ்லிம் இலக்கியமும் பண்பாட்டுப் பின்னணியும்

கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ்

புலவர்களின் பெயர் பட்டியல் வாழ்க்கைக் குறிப்புகளுக்கு முக்கியம் தரப்படுமாயினும் பிரதான புலவர்களின் இலக்கியப் படைப்புக்களே ஆய்வுக்கு எடுக்கப்படவுள்ளது. இவ்விடயத்தில் புலவர்களின் பெயர்கள் அவர் தம் சேவைகள், படைப்புகள், பற்றிய தகவல்களை வாசகர்களாகிய நீங்களும் தந்து உதவலாம்

**பழைமைப் போக்கு:**

10ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலும் முஸ்லிம் புலவர்கள் வரிசையாக அவர்களின் இலக்கியப் பங்களிப்புக்களை பார்க்கும் போது பழைமை பேணுவதும், தமது முன்னோர் அல்லது மூத்த புலவர்கள் காட்டிச் சென்ற பாதையைத் தொடர்ந்து சென்றதையுமே காண முடிகிறது. இப்பழைமைப்பாதையை உடைத்தெறிந்து சமூக உணர்வினை வெளிப்படுத்திய கவிஞரைக் காண்பது பெரும்பாலும் அரிதாக உள்ளது. 1890களில் தோன்றிய புத்தளம் பிரதேச வரகவி செய்கு அலாவுத்தீன்வரை இப்பிரச்சினை தீர்க்கப்படாததாகவே இருந்துள்ளது.

பெரிய மாற்றங்கள் இல்லையென்றாலும் முஸ்லிம் புலவர்கள் தமக்குரித்தான இலக்கிய கலாசாரம் ஒன்றை தளர்ச்சியின்றி 20ம் நூற்றாண்டில் பின் அரைப்பாதிவரை கொண்டு சென்றனர். கவிஞர் திலகம் அப்துல்காதிர்வெப்பை 1935ல் புதிய பாதையை முஸ்லிம் கவியுலகிற்குத்தந்தபோது கூட அப்பழம் மரபின் தொடர்ச்சி உயிர்ப்புடனிருந்தது. எவ்வாறாயினும் முன்னர் குறிப்பிட்டது போல இப்புலவர்கள் அல்லது புலவர் மரபைப் பின்பற்றியவர்கள் சமூதாயத்தையோ மக்கள் பிச்சினைகளையோ பாடற் பொருளாக எடுத்துக் கொள்ளவில்லை. செய்யுள் மரபு கீர்த்தனை, எனறு, நாட்டாரிசை வடிவங்களில் வழமையாகப் போற்றப்பட்ட செய்திகளே தொடர்ந்தும் இம்மரபினால் பேணப்பட்டன. சில மாற்றங்களையாவது காண்பதற்கு நாட்டார் இசையும் நாட்டார் பாடல்களும்தான் அடிப்படையாக இருந்துள்ள தென்பதை இங்கு கூறுவது அவசியமாகும். 'தமிழில் புலமை வேண்டும் கவிபாடுவதற்கு' என்ற அச்சங்களுக்கு இடமளிக்காது கிராமப் புலவர்கள் பலர் நாட்டாரிசையில் தேவைக்கேற்றவாறு பாடலியற்றி வழங்கினர். இவை பொது மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த போதும் இவை பிரபந்தங்களாகவும் நூல்களாகவும் வடிவப்படுத்தப்படாமையால் அநேக படைப்புக்கள் காலவெள்ளத்திற்கிரையாகிவிட்டன.

**மன்னார்:**

இவ்விருவகை இலக்கியப்போக்குகளை மன்னார் மற்றும் புத்தளம் 19ம் நூற்றாண்டு இலக்கியப் பின்னணியில் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. வேறு பிரதேசங்களிலும் இதே பின்னணியைக் காண்பதும் கடினமல்ல. மன்னார் மாவட்டப் புலவர்களில் பக்கீர்ப்புலவர் பிரதான இடத்தைப்பெறுகிறார். 19ம் நூற்றாண்டு முஸ்லிம் புலவர்களில் முக்கியமான ஒருவர் என்றும் இவரைக் குறிப்பிடலாம். எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் 1862 ல் பிறந்த பக்கீர்ப்புலவர் பல இலக்கியப்படைப்புக்களை வழங்கியுள்ளதாக அறிய முடிகிறது. பழைய சுவடிகளில் எழுதப்பட்ட அவரது பல படைப்புக்கள் காலவெள்ளத்திற்கு இரையாக்கப்பட்டன. சமூக ஜோதி (1972) பக்கீர்ப்புலவர் பற்றி சில தகவல்களைத் தந்துள்ளது. எட்டு நரகபந்தம், ஹஸன் ஹுஸைன் பேரில் பாடிய எமகம், விதானைப் புலவர் பெயரில் பாடியுள்ள சரமகவி, குத்து நாயகம் கொடிப்பாட்டு, மட்டக்களப்பு காத்தான்குடிச் சந்ததைப்பாட்டு நீதிமன்றப்பாட்டு, துருக்கித் தொப்பிப்பாட்டு. நடுச்சொல்லலங்காரம், என்ற படைப்புக்களோடு நாடகங்களையும் அவர் இயற்றியளித்துள்ளார். 'காந்த ரூபி' இசை நாடகம் இதில் முக்கியமானதாகும். காந்த ரூபி இசை நாடகம் எருக்கலம்பிட்டியில் இரு முறை மேடையேற்றப்பட்டுள்ளது. கரைத்தீவு வரகவி செய்கு அலாவுத்தீன் புலவரின் நாடகக் குழுவினர் காந்த ரூபி நாடகத்தை கரைத்தீவில் மேடையேற்றியுள்ளனர். புலவரின் நாடகக் குழுவில் நடிகராக இருந்த ரெஜிஸ்ட்ரார் காசீம் 1978ம் ஆண்டு செய்கு அலாவுத்தீன் ஆய்வுகளை மேற்கொண்டபோது காந்த ரூபி நாடகத்திலிருந்து பல பாடற்பகுதிகளைக் கட்டுரை ஆசிரியருக்குப் பாடிக்காட்டியதையும் இங்கு நினைவு கூறலாம்.

காந்த ரூபி நாடகமும் அதுபோன்ற வேறுசில நாடகங்களும் இப்பிரதேசத்தின் அல்லது இலங்கை முஸ்லிம்களின் இசை தொடர்பான வளர்ச்சியில் கவனத்திற் கொள்ளவேண்டிய அம்சங்கள் பலவற்றைக் கொண்டிருந்தன. எழுத்துருவில் மட்டுமே ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் இப்பாடல்களைச் சேகரித்து இலக்கிய இலக்கணச் சிறப்புக்களைப் பற்றிப் பேசலாமேயன்றி இசை பற்றியாதும் பேச முடியாது. அவை இசைக் குறிப்புக்களற்ற இசைப்பாடல்களை அவை சிறந்த தாளக்கட்டுக்களையும் ராகங்களையும் இசை ஒழுங்குகளையும் கொண்டபாடல்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

காந்த ரூபி நாடகத்தில் தனது படிப்பை முடித்துவிட்டு வந்த மைந்தன் மதன கேசரியைப்பார்த்து ஆசிரியரிடம் கற்ற கலைகள் எவ்வகையானவை எனச் சொல் என்ற போது மைந்தன் பாடியதில் ஒரு பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய விருத்தம்

.... .... .... ....

தளையெதுகை மோனை பொருத்த மிரளபடைச்
சந்தி சாரியயசைச் சொல்
சாற்றுவாசிரியப்பா வெண்பா கலிப்பா
தகுந்த வஞ்சியு மருட்பா
சகல பாக்கட்குரிய வாய்ப்பாடுமுவமானச்
சங்கிர மணியிலக்கணம்

... ... ... ... ...

மன்னைந்திலக்கணம் தொன்னூல் விளக்கமும்
வண்டரு பன்னீர் நிரண்டு
மகிழ்யாப்பருவங்களை காரிகையும் நன்நூலும்
மல்லாடு கல்லாட நூல்
மாற்றரிய வீரசோழ சாஸ்திர முறைப்படி
விழுவிதிவிலக்காறுடனே
கங்கை நிகரிலக்கணம் பற்பல விலக்கியம்
காஞ்சபதினெண்புராணம்
கரைக்காறு சாஸ்திரம் அறுபத்திநான்காம்
கலைக்கியான விதி நூல் முறை
கண்ணொற்ற பிரபந்தம் தொன்னூற்றியாறோடு

... .... .... ....

அங்கப் பரீட்சை யானை குதிரையேற்றமொடு
அதிகவிஸ்தார குஸ்தி
அடிசிலம்பந்து நக்கோடு கருநாடகம்
ஆன சீண்டி சடுக்கா
அரிய குறவஞ்சி வாள்வீச்சு வித்தைகள்
அனேகங்கள் கற்றேறளித்த

... .... .... .... ...

காந்த ரூபி நாடகத்தின் இளவரசன் ஊர்சுற்றிப் பார்க்கையில் கண்களுக்குள் அகப்பட்ட அழகிய மங்கைபற்றிய வருணனையில்.

இவளாரோ? எந்தவூரோ? என்னென்ன பேரோ?
இவளாரோ? எந்த ஊரோ? என்னென்ன பேரோ?
அவள் ஈரேழையும் ஆண்டிடவந்தாளோ
அத்தினி, சித்தினி, முத்தனியுத்தமி....... அப்பப்பா
அத்திரவிழிச் சிர்மாமணி, பத்தினிச்சாதிப் பெண்
மாதிவள்(ஆரோ)
இந்திராணி மேனகையோ என்னைப் பார்த்து
ஏந்திழையாள் வெகு சாந்த குணமாது
அந்திரபூரண சந்திரனோ முகம் ....... அப்பப்பா

..... ..... ......... .......

கஞ்ச மலரிற் கண்டஞ்சும் பொன்வல்லியோ
காமன்ரதியோ கந்தன் குறவள்ளியோ
பஞ்சவர்ணக்கிளி ரஞ்சித மோயிவள்........ அப்பப்பா

எழுந்தவாரியாக எந்த இடத்திலும் பாடும் திறமை இவருக்கிருந்ததால் இவரைப் பலர் சரஸ்வதிப் புலவர் என அழைத்தனர். இவரது இலக்கிய இலக்கண அறிவினை அறிந்த மதுரைத் தமிழ்ச்சங்கப்பேரவை அதன் அங்கத்தவராகவும் அவரைச் சேர்த்துக் கொண்டது. அவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கும் சென்றுள்ளார்.

தமிழ் செய்யுள் இலக்கண வித்துவத்தன்மையை வெளிப்படுத்தும் பல செய்யுள்களை அவர் இயற்றியுள்ளார். 'சலாம்' கூறுவதற்காக 'துருக்கித் தொப்பி' வாங்கிவருவதற்காக சொற் சிலம்பங்களால் விளையாடப்பட்ட சில செய்யுள்கள் இன்றும் அழியாது பாதுகாக்கப்பட்டுள்ளன. இவை அவரது தமிழ் மொழிப் புலமைக்குச் சான்றுகளாக உள்ளன. இவர் 1917ம் வருடம் காலமானார்.

### விதானைப் புலவர்.

மீராசாகிபு பக்கீர்த்தம்பிப் புலவர் விதானைப் புலவரின் சீடர். விதானைப்புலவரின் பெயர் சின்ன இப்றாகிம் முகையதீன் கப்படையார் என்பது. இவரும் மன்னார் பிரதேசத்தின் புகழ்பெற்ற புலவராகும். இவர் இசை நாடகங்கள் எழுதுவதில் சிறந்து விளங்கியுள்ளார். அவர் இயற்றிய காஞ்சி நாடகம், கபுகாபு நாடகம் என்பன பல முறை மன்னாரில் மேடையேற்றப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. 'யானைக்காதல்' என்ற யானைபிடிப்போர் பாடிச் செல்லும் பாடலையும் இவர் பாடியளித்துள்ளார். மறிச்சிக்கட்டி, கரடிக்குளி, பாலைக்குளி யானைப்பிடிப்போர் இப்பாடல்களை யானைபிடிக்கும் போது பயன்படுத்திவந்துள்ளனர்.

புத்தளம் தேர்தற் தொகுதியில் உள்ள கண்டற்குளி, பள்ளிவாசல்துறை போன்ற ஊர்களில் களிகம்பாட்டக் குழுவினர் 1960களில் பாடிவந்த பாடல்களில் காத்தான்குடிச் சந்தைப்பாட்டும் ஒன்றாகும். அது மீராசாகிபு பக்கீர்தம்பிப் புலவரின் பாடலாகும். அப்பாடலில் சில பகுதிகள் வருமாறு.

சந்தையைப் பாராய் – மீராபள்ளி
சந்தையைப் பாராய் – [illegible]ய பள்ளி
சந்தையைப் பாராய்
மிக ....... பலபொருள்கள் – தினமும்
மலிவாய்விற்கும் – சந்தையைப் பாராய்

விந்தை மிகுந்திலங்கும் மேலோர் அருள் விளங்கும்
விளப்பமிகுந்த மட்டக்களப்பு நகரைச் சேர்ந்த
உயர்ந்துலவிய காத்தான்குடி இந்தாங்குறிச்சியில்
கூறும் நனி மிகுந்த மீராபள்ளியைச் சேர்ந்த (சந்தை)

தேங்கனி மாங்கனி தோப்புரி மாங்கனி
சேர்ந்த வாழையின் கனி யானை வாழையின் கனி
இதர வாழையின் கனி மதுரவாழையின் கனி
இரும்பலா கனிகள் ரசம் மிகுந்த
தரும் கொய்யாக் கனிகள் ஒருபகுதி

... ... ... ... ...

தேட்டு மீன் கருகண்ணிசிறையா மீன் கூவிரால்
தெரளி மணலை ஊளி திருக்கை உழுவை காலை
வேட்டுங்கொடுவாய் நெய்மீன் வேளாய் பாலைமீன்
வெண்ணை சுறாவும் தத்தம் எண்ணப்படி நிறைந்த
மீன்கள் விற்றிடுவார் விலைகள் கேட்டு
வாங்கி விற்றிடுவார் ஒரு பகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... ... ... ... ...
மாட்டுக்கறியுடன் வெள்ளாட்டுக்கறி கொழுத்த
மான்கறி மரைக்கறி வான்கோழி முயல்கறி
கோட்டு சேவலின் கறி வீட்டு சேவலின் கறி
கோழிக்கறியும் கவுதாரிக்கறியும் உள
குறிச்சியின் நாற்புறம் நிறுத்துவிற்கும்
இறைச்சிக் கசாப்பும் ஒரு பகுதி

## புராணப்படனம்

புராணம் வாசித்துப் பொருள் சொல்லும் தமிழ் இலக்கிய மரபு, மன்னாரிலும் புத்தளத்திலும் முஸ்லிம் புலவர்களின் பொருள் சொல்லும் இலக்கியப் பேருரைகளாக மெருட்கூட்டப்பட்டு முஸ்லிம்களின் முக்கிய இலக்கிய அங்கமாக வளர்ச்சி பெற்றிருந்தது. சீறாப்புராணம், முகிதீன் புராணம், ஆலிபு நாயகம், இராஜமணி மாலை போன்ற முஸ்லிம் காப்பியங்கள் படிக்கப்பட்டு முஸ்லிம் புலவர்களால் பொருள் சொல்லப்பட்ட மரபு 19ம் நூற்றாண்டின்பின்னரும், தனிச் சிறப்பாக இலக்கிய நிகழ்ச்சியாக மக்கள் மத்தியில் புகழ் பெற்று விளங்கியது. புராண விரிவுரைகள் என்றும் அழைக்கப்படட இம்மரபு 1960கள் வரை எருக்கலம்பிட்டி, தாராக் குண்டு போன்ற இடங்களில் நடைபெற்றுள்ளது.

1970ல் மறைந்த கொண்டச்சுப் புலவர் எம்.எம் முஹம்மது ஷரீபு சீறாப் புராணம், முகியத்தீன் புராணம் போன்ற புராணங்களுக்கு விரிவுரையாற்றுவதில் புகழ்பெற்று விளங்கினார். வவுனியா மாவட்டத்தில் இவரது புராண விரிவுரைகள் தொடர்ச்சியாக நடந்துள்ளன. மார்க்க புராண விரிவுரையை அவர் தமது தொழிலாகவும் கொண்டு புராண விரிவுரைகளுக்காக இலங்கையின் பலபாகங்களுக்கும் சென்று புராணவிரிவுரைகள் ஆற்றியுள்ளார்.

1960ன் ஆரம்பத்தில் பள்ளிவாசல்துறை சி.மு. வீட்டிலும் பல இரவுகள் அவர் தொடர்ந்து சீறாவுக்கு விரிவுரைகள் ஆற்றி மக்களை மகிழ்வித்துள்ளார். சிலாபத்துறை புதுவெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஹபீபு முஹம்மது மரைக்காயர் J.P. (1923), புலவரும் புராண விரிவுரையாற்றுவதில் புகழ்பெற்று விளங்கினார். சீறாப்புராணம், நவமணிமாலை, முகையத்தின் புராணம், குதுபு நாயகம், இராஜ நாயகம், ஆரிபு நாயகம் போன்ற முஸ்லிம் புராண இலக்கியங்களுக்கு எருக்கலம்பிட்டி, விடத்தல்தீவு, பெரியமடு, தாராபுரம், வவுனியாவில் உள்ள சாலம்பைக்குளம், சூடுவெந்த புனவு, பாவற்குளம் போன்ற ஊர்களில் நூற்றுக்கணக்கான மக்கள் முன்னிலையில் தொடர்ச்சியாகப் பல இரவுகள் புராண விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார்.

1921ல் பிறந்த முசலியைச் சேர்ந்த கவியப்பா என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட மீ.ஹபீப் முஹம்மது புலவரும் புராண விரிவுரையில் பயிற்சி பெற்றவராகவிளங்கினார். இவர் அகதி வாழ்வை புத்தளம் பிரதேச கண்டற் குழியில் 1990ல் ஆரம்பித்த போது 1993ல் இப்புலவரைச் சந்திப்பதற்காக அங்கு சென்ற இக்கட்டுரையாசிரியரிடம் ஹபீப் முஹம்மது புலவர் யானைக்காதல் பாடலைப் பாடிக்காட்டியதோடு முகிய்யத்தீன் புராணத்தின் காப்புவிருத்தத்திற்கான புராண விரிவுரையையும் நிகழ்த்திக் காட்டினார். அக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து வந்த புலவர்களும் மன்னாரிலும் புத்தளத்திலும் பல புராணவிரிவுரைகளை நிகழ்த்தியுள்ளனர். புத்தளம், திகழி, பள்ளிவாசல் துறை. கல்பிட்டி போன்ற ஊர்களிலும் இந்தியப் புலவர்களும் உள்ளூர்ப்புலவர்களும் பொருள் சொல்லும் அல்லது புராண விரிவுரை செய்யும் பல நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர்.

தொடரும்.

## வேதனம்

கெடுபிடிகள்
நிறைந்த மக்கள் பேரணி
கொஞ்சநாளாய்
குறைந்திருக்கிறது - இங்கு
சந்தோசம் - எங்கும்
கிலாவிக் கிடக்கிறது

இன்று
அந்த வழியால்தான்
குமார்களும்
சுதாக்களும் சுதந்திரமாய்
செல்கின்றனர்

அந்தச் சாவடியில்
பல குண்டுகள்
வெடித்த தழும்புகள் மட்டும்
நடம் மாறவில்லை

குரல்கள்
அறுக்க முனையும்
வட்ட மேசையின்
நிலை கண்டு
நான் மட்டும்
அந்த வழியால் செல்லும் போது
யோசிக்கிறேன்
குமார்களும் சுதாக்களும்
வைத்த தழும்பு
முறைகளை
அறிவதற்காய்......!??

-மருதநிலா நியாஸ்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளிச்சம்

நூல் : சிறுபான்மையினர் சில அவதானங்கள்
ஆசிரியர்: எம்.எம்.எம். நூறுல்ஹக்
வெளியீடு:-மருதம் கலை இலக்கிய வட்டம்
சாய்ந்தமருது-05

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் என்பது ஒன்றன்று பலவேறு மையங்களையும் தளங்களையும் வேறு பாடுகளையும் கொண்டவை. பெரும் பான்மையினம் சிறுபான்மை இனம் மீது ''அடக்குமுறை'' என்கின்ற பதம் நம் நாட்டில் பாரிய யுத்தத்தையே கட்டவிழ்த்து விட்டு நிற்கிறது.

சிங்களப் பேரினவாதம் சிறுபான்மையான தமிழ் முஸ்லிம் சமூகத்தின் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடரப்பட்ட சதி முயற்சிகளின் வெளிப்பாடுகளை உரிய நேரத்தில் அந்தந்த சமூக மக்களின் சிந்தனைக்குக் கொண்டு வருவதில் முனைப்புடன் ஈடுபாடு காட்டி வருகின்றார் எம்.எம்.எம்.நூறுல்ஹக் அவர்கள். தற்கால இனமுரண்பாடு சம்பந்தமான விடயங்களைத் தேடுபவர்களுக்கு ஏற்றவகையில் அரசியல் அறிவார்ந்த கருத்துக்களையும் ஆதாரபூர்வமான தகவல்களையும் கொண்டு ''சிறுபான்மையினர் சில அவதானங்கள்'' எனும் நூலை நூறுல்ஹக் அவர்கள் தம் இரண்டாவது நூலாக வெளிக்கொணர்ந்துள்ளார். இந்நூல் மிகக் கூர்மையாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இந்நூலானது வெறும் தகவல் திரட்டாகத் தேங்கிக் கிடக்கும் ஓர் ஏரி நீரல்ல. அது இடையறாது சலசலத்து ஓடிக் கொண்டிருக்கும் அரசியல் மையப்பிரச்சினைகளின் இரத்த ஆறு. இந்த இரத்த ஆற்றின் வெள்ளோட்டம் மாற்றமின்றி செல்வது போலத் தோன்றினாலும் மாறிமாறி ஆட்சி செலுத்தும் கட்சிகள் இரத்த ஆறின் ஓட்டத்தின் வேகத்தை கூட்டுகின்றன. புதுப்புது வடிவங்களில் இன ஆதிக்கம் தோற்றம் பெற்று இனவுணர்வைக் கக்குகின்ற பொழுது மேலும் இம் முரண்பாடுகள் வலுப்பெறுகின்றது. இவர் பெரும்பான்மை சிங்கள மக்களால் சிறு பான்மை மக்களது சுயம், தனித்துவம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம் ஆகியவை பாதிப்புறும் நிலையை மிகுந்த நம்பகத்தன்மையோடு இரத்த வெள்ளோட்டம் ஓடும் ஆற்று நீராக காட்ட முற்பட்டிருப்பது அவர் தம் சார்ந்துள்ள எழுத்தின் மீது கொண்டுள்ள அதீத ஈடுபாட்டினால் என்பதைவிட முன் எப்போதும் இல்லாத அளவுக்கு இன்றைய அரசியல் சூழலில் இனவுணர்வு விழிப்புணர்வு பெற்று வெறியாட்டம் ஆடும் நிலையை வெறும் காட்சிப் பொருட்களாய் மாத்திரம் பதிவு செய்யாமல் இப்போக்கிலிருந்து சிறுபான்மை சமூகத்தினரது பாதுகாப்புக்குரித்தான ஒரு மத்தியஸ்தத்துடன் பிரக்ஞைபூர்மாக பதிவு செய்யும் செய்திகளையும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயங்களுக்கு சிந்தனைகளையும் கூறுகின்ற ஒரு நூலாகக் கொள்ளலாம்.

இந்நூலிலுள்ள கட்டுரைகள் யாவும் நான்கு வகை அரசியல் அடிப்படைகளில் எழுதப்பட்டுள்ளன என்று நூலுக்கு தகவுரை எழுதிய அரசாங்க நிர்வாக உத்தியோகத்தரும் பிரபல எழுத்தாளருமான ஏ.எல்.எம்.பளீல் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அவையாவன,

1. இலங்கையின் முக்கியமான விடயங்களிலான அரசியல், அதன் அடிப்படையில் அதிகாரம் பெற்றியங்கும் ஆணைக்குழுக்கள். சிறுபான்மை மக்கள் மீது அவற்றின் தாக்கம், அதற்கான மாற்று ஆலோசனைகள்.
2. தேசிய அரசியலில் அரசியல் கட்சிகளின் போலித்தனங்கள், தில்லுமுல்லுகள், கூட்டுக்கள், ஒப்பந்தங்கள் அவற்றின் சாதக, பாதகமான அரசியல் முன்னெடுப்புக்கள்.
3. வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் அவர்களின் காய் நகர்த்தல்களில் உள்ள பலவீனங்கள் அவைபற்றிய காரசாரமான விமர்சனங்கள், இனப்பிரச்சினை, தமிழர்களின் பாரம்பரிய அம்சங்கள்.
4. இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் சமுதாய மீதான தூர நோக்கின்மை, அவற்றில் தொக்கி நிற்கும் போலித்தனங்களும் முரண்படும் விடயங்கள். முஸ்லிம்கள் மீதான ஏனைய சமூகத்தினரின் சந்தேகங்கள்.

இவ்வாறான பல சிறப்பம்சங்களை வரலாற்று ரீதியாகவும் ஆதாரபூர்வமாகவும் உரிய நேரத்தில் மக்கள் மன்றத்திற்கு கொண்டு வந்து அவர்களது பிரச்சினை பற்றிய கருத்தாழத்துக்குச் சென்று சிந்திக்கத் தூண்டியும், அவை முக்கியமல்ல அடிப்படையான வேருக்குச்சென்று அறிகுறியைப் பார்த்தறிந்து, அதற்கு மாற்றீடு பற்றிய சிந்தனைகளை முன்வைப்பதிலும் அவை மேலும் பரவாமல் தடுப்பதிலும் அவை எவ்வாறு தோற்றம் பெருகிறது. அதை முளையிலே கிள்ளி எறிந்து விடுவது மிக முக்கியமானதும் அவை அரசியலிலே காலம் காலமாய் முக்கிய அரசியல் சாசனமாய் பங்கு வகிக்கின்றது. இதற்கு எது முன்னோடியாக அமைந்துள்ளது என்பதைப் பற்றி எல்லாம் கவனஞ் செலுத்தி தனக்குள்ள எழுத்தாற்றலை நூலாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

1910-1931 வரையிலான இனவாரிப் பிரதிநிதித்துவ முறைமையும் 1931-1978 வரையிலான பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறைமையும் 1978லிருந்து இற்றைவரை நடைமுறையிலுள்ள விகிதாசாரப் பிரதி நிதித்துவ முறைகள்தான் இனத்துவ அடக்குமுறைக்கு வழிவகுத்தன. இந்தச் சூழலின் எண்ணக் கருக்களை சரியான தகவல்களுடனும் நிதானத்துடனும் பதிவு செய்துள்ளார். இனத்துவ வெளிப்பாடு முதலில் இந்த இடத்தில்தான் வேரூன்றி நிற்கிறது என்பதை மிகையாகக் கொண்டு இரு கட்சி ஆட்சி முறைதான் மிக முக்கிய காரணியாக இருந்து வருகிறது என்ற கூற்றை நிரூபித்துக்காட்டும் கட்டுரை இந்நூலில் ''சுதந்திர இலங்கையின் 11 பாராளுமன்றங்கள் - ஒரு பார்வை 1947-2000'' எனும் தலைப்பால் முதலில் இடம்பெறுகிறது. இது இந்நூலுக்கு முதற்கட்டுரையாக அமைவது மிகப் பொருத்தமாக உள்ளது எனக் கொள்ளலாம்.

தமிழர்கள் பிரச்சினையானது ஒரு தொடர்கதை. வரலாற்றுக்குரியது. இனப்பிரச்சினை பற்றி பேசுவோர் தமிழர்கள் பிரச்சினைகள் தீராதவரை நாட்டில் நிம்மதி ஒன்றைக்காணவே இயலாது. தமிழர் பிரச்சினை என்பது பெரும்யுத்தமாக வெடித்து என்னமோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் என்ற நிலைநின்று ஒரு பாசாங்கு காட்டுகின்ற அளவில் நாடு இன்று உள்ளது. சமாதானம் தேவை என்று வாயால் மட்டும் பேசுவோர் உண்டு. ஆனால் அது நிரந்தரமாகத் தேவை என்று ஏற்றுக்கொள்பவர் யாரும் இல்லை. இத்தகைய சூழ்நிலையால் இலங்கைக்கு விமோசனம் இல்லை. நாட்டின் எதிர்கால நம்பகத்தன்மையும் உறுதிப்பாடும் கேள்விக் குறியாகவே உள்ளன. நாடு விமோசனம் பெற வேண்டுமெனில் முதலில் தமிழர் பிரச்சினைக்கு மதிப்பளிக்க வேண்டும் என ''தமிழர் பிரச்சினை தீராவரை இலங்கைக்கு விமோசனம் இல்லை.'' என்னும் தலைப்பிலான கட்டுரை விழிப்புணர்வைத் தூண்டி நிற்கிறது.

நூலில் மற்றுமொரு முக்கிய கட்டுரையான ''கல்முனை கரையோர மாவட்டத் திட்டம் இலங்கையில் நிர்வாகத் திட்டத்திற் குட்பட்டதே.'' இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம்களின் அங்கீகாரங்களையும், அடையாளங்களையும் நம்பகத்தன்மையையும் ஓரளவு வெளிப்படுத்தும் கல்முனைக் கரையோரப் பிரதேசத்தை நிர்வாக மாவட்டமாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வலியுறுத்தும் கட்டுரை அப்பிரதேச மக்களது சமூக உணர்வையும் தூய்மையையும் குழிதோண்டிப் புதைக்க முற்படும். இனவாத வக்கிர உணர்வுடன் சூட்சுமத் திட்டம் வகுப்பார்களுக்கு சாட்டை அடியாகவும் அதேவேளையில் அம்பாறை மாவட்ட குடிசனத்தொகை, வாக்காளர்தொகை, நிர்வாகம் மாவட்டம் தேவை என்பதற்கான பின்னணிகளின் வரலாற்றுப் பார்வை. அரசியல் அணுகுமுறைகள், எதிர்ப்புக்கள், நியாயமான தீர்மானங்கள் எனப் பல விடயங்களை கட்டுரை படம் பிடித்துக்காட்டுகிறது.

இந்நூலை வாசிக்கும் பொழுது இஸ்லாத்தின் பார்வையில் தனித்துவமான பண்பாடு நாகரிகம் பற்றிய மிக முக்கியமான அறிமுகக் குறிப்பும் ''தனித்துவமான இஸ்லாமிய பண்பாடு, நாகரிகம்'' எனும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது இக்கட்டுரை, இலங்கை இனமுரண்பாட்டுச் சூழலில் முஸ்லிம்கள் கட்டாயம் தேடிப்படிக்க வேண்டியவை. பல நல்ல செய்திகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தப் பண்பாடு, நாகரிகம்தான் இலங்கை வாழ் முஸ்லிம்களிடமும் பிரதிபலிக்கின்றன. ஏனென்றால் இந்தத் தனித்துவ அடையாளங்கள்தான் இலங்கையில் ஏனைய சமூகத்தவர்கள் வாழும் சூழலிலிருந்து விடுபட்டு நெருக்கடியற்ற சமூக சூழலில் வாழ்வதற்காய் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். இது இஸ்லாமிய தனித்துவ மார்க்கத்தின் செயல்முறை மட்டுமல்லாமல் இறைவழிபாட்டில் அருட்கொடையையும் உள்ளடக்கியதாகும். எனினும் இதனை இந்நூலாசிரியர் இந்நூலில் பதிவு செய்வதற்கு முக்கிய காரணம் தற்கால இலங்கையில் இனத்துவ வெளிப்பாடு இருப்பதனால் முஸ்லிம்களுக்கென தனித்துவ அடையாளங்கள் இருப்பதை ருஜுப்படுத்த எடுத்துக் கொண்டவையாகும்.

இலங்கைத் தேர்தல் முறையில் மக்கள் தீர்ப்பும் அரசியல் அமைப்பு மாற்றங்கள் குறித்து மக்களே சிந்திக்கவும் அது பற்றி விமர்சிக்கவும் முனைந்துள்ளமையை அரசியல் நெருக்கடிக்காலங்களில் அவதானிக்கலாம். 1978ல் யாப்பு முறையை கொண்டிருக்கும் அதிகாரங்களால் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய சாத்தியக் கூறுகளோ செயல் திட்டங்களோ சிறந்த வழித் திறவு கோல்களோ அரசியல் சூழலில் இல்லை. அப்படி நிறைவெற்றக் கூடிய தீர்வொன்று உருவாகி மீண்டும் ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டுமெனில் நடைமுறையிலுள்ள அரசியல் யாப்புமுறைப் பூட்டை உடைக்கவேண்டும். நாட்டில் அதைத் திறக்கக் கூடிய சாவிக் கொத்துக்கள் இல்லை என்று சொல்லலாம். நாட்டில் சமாதானத்திற்கான தடைகளையும் எதிர்மறைபொருட்களையும் சுட்டிக்காட்டி இலங்கை அரசியல் சூழலின் குறைபாட்டைத் தெளிவுபடுத்துகிறார். இவர் குறிப்பாக சாதாரண பெரும்பான்மையும் மக்கள் தீர்ப்பும் அரசியலமைப்பை மாற்றியமைக்கப் போதுமானதா? எனும் தலைப்பிரான கேள்வியுடனே இன்றுள்ள அரசியல் நெருக்கடியைத் தெளிவுபடுத்துகிறார்.

இத்தகைய தீவிரமான இனவாத வரலாற்றுப் போக்கின் பெரும் பகுதியைத்தான் எம்.எம்.எம்.நூறுல்ஹக் நூலினுள் உள்ள இருபத்திரண்டு கட்டுரைகளிலும் பதிவுசெய்துள்ளார். சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு மறுக்கப்படுவதையும், அதைபாதுகாப்பதற்கான உத்தரவாத மின்மையையும் பற்றிய பல விபரங்களைக் கட்டுரை கூறுகிறது. பாதிப்புற்ற இனக்குழுக்கள் சம்பந்தமான விசயங்கள் பேசப்படுகின்றன. அது Liberation என்ற கோட்பாட்டை முக்கிய தளமாகக் கொண்டு Nationalities உருவாக்கம் பெற்று பிரகடனம் செய்யும் வரலாற்று நிகழ்ச்சிகள், முஸ்லிம், தமிழ் சமூக மக்களின் பண்பாட்டுத் துறை தொடர்பான முன்னிலைப் பங்குகள், அநீதி இழைக்கப்பட்ட இனக்குழுக்களுக்கு நியாயமான தீர்வுகிடைக்க வேண்டுமென்ற குரல், கொடிய யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து சமாதானம் பூத்துக்குலுங்கச் செய்வதற்கான கருத்தாலோசனைகள், இனத்துவ முரண்பாட்டுச் சிக்கற்பாடுகளின் பல வடிவங்களைப் பற்றிய விபரங்கள் போன்றவை ஆசிரியர் நூறுல்ஹக் நேரடியாகவே விபரிக்கிறார். இதில் இடம் பெற்றுள்ள தகவல்யாவும் நேர்மாறாக அல்லாமல் அப்படியே உள்ளதை உள்ளவாறு பிரதி செய்யப்பட்டுள்ளது. புலிகளை ஒதுக்கிவிட்டு சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. இலங்கை அரசியலில் ஜூலைக் கலவரம், சிவப்பு நீலம் கூட்டு. தடம் மாறும் இடதுசாரிகள் போன்ற தலைப்பிலான கட்டுரைகள் அடையாளப்படுத்தப்பட்ட இலங்கை இனவாத வரலாற்றின் புகழ்பெற்ற நிகழ்ச்சிகளாயினும் விடயங்கள் புதுமையாய் நினைவுபடுத்தப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் மிகமுக்கிய பிரச்சினைகளும் அவர்களது வேட்கைகளும் நூலில் எதிரொலிக்கின்றன. முஸ்லிம்களுடைய நியாயமான சுயநிர்ணயக் கோரிக்கைகளை சிங்களச் சமூகமும் தமிழ் சமூகமும் தயக்கமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறுபான்மையான தமிழ் முஸ்லிமாகிய நமக்கு எந்தப்பகைப்புலன்களும் இருக்கத் தேவை இல்லை என்ற செய்திகளும் கவனத்தில் கொண்டு எடுத்தாராய்ந்துள்ளார்.

இடி ஆசிரியர் சூரன் ஈ ரவிவர்மாவின் முகவுரையில் கூறுவது போன்று உண்மையிலேயே இந்நூல் ''சிறுபான்மையினர் சில அவதானங்கள்'' என்ற நூல் வரையறையும் தாண்டி ஆவணமாக உயர்ந்துள்ளது என்று குறிப்பிடும் அளவுக்கு இந்நூலில் மிகத் தேவையான செய்திகள் வெளிப்பட்டு நிற்கின்றது என்பது பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இந்நூலில் உள்ள கட்டுரைகள் யாவும் மிகுந்த அவதானத்துடன் எழுதப்பட்டிருந்தாலும் நூலாசிரியர் உசாத்துணைக்குப் பயன்படுத்திய நூல்களின் பெயர்ப் பட்டியல்கள் பத்திரிகைகளின் பெயர்கள், பிரசுரங்கள் ஆகியவற்றை முறைப்படி பின்னிணைப்பாகச் சேர்த்திருந்தால் இன்னும் வலுவாக அமைந்திருக்கும் எனலாம். நூறுல்ஹக் மேலும் இதுபோன்ற நூல்களைத் தர வேண்டுமென்பது என் எதிர்பார்ப்பாகும்.

இ.அ.

சென்ற தொடர்.....

நூல் : நல்லதொரு வீணை செய்தே

ஆசிரியர் : எஸ்.நஸீறுதீன்

(சிறுகதைத் தொகுதி)

'புருஷலட்சனம்' எனும் கதை பெரிதாகக் கற்பனையினை வலிந்து கட்டிக்கொண்டு கூறும் கதையல்ல இது அன்பின் இறுக்கத்தினால் கணவன் மனைவிகளுக்கிடையே நடைபெறும் அந்தரங்கமான 'ஊடல் கூடல்' என்ற உணர்வு நிலை மிகவும் அப்பட்டமாகச் சொல்லப்படுகிறது. இதில் எந்தவிதமான விரசப் பார்வையோ சிக்கலோ சிடுக்கோ இல்லாமல் கதை மென்மையாக உள்ளது.

ஏழ்மை பற்றியும், ஏழ்மை கல்வி உளவியல் பற்றியும் தற்கால கல்விப் போதனை முறைகளில் மாணவர்கள் பாடசாலை செல்லாமல் சுயமாக கல்வி கற்கலாம் என்றும் அல்லது பாடசாலை சென்று ஆசிரியர்களின் துணையோடுதான் கல்வி கற்கலாம் என்றும் பலத்த விவாதங்கள் கதையோட்டத்தில் பொறிபறக்க நடந்து கொண்டிருக்கையில், தனக்கு கல்வி புகட்டிய ஆசானை எக்காலத்திலும் மறத்தல் இயலாது என்ற உயர்பண்பை உணர்த்த எடுத்துக்கொண்ட கதையம்சம்தான் 'அனுவாதம்' எனும் கதை. இக்கதை முழுக்க முழுக்க கல்வியல் வாழ்வை மட்டுமல்லாமல் போர்க்காலச் சோகச் சித்திரங்களையும் பிரதிபலிக்கக் கூடியதாக உள்ளன.

இக் கதையில் இழையோடும் அம்சங்கள் தற்கால சிறுகதை படைப்புக்களில் காணப்படுவதில்லை. அவ்வாறு காணப்பட்டாலும் சிறுவர்களை வன்முறைக்குத் தூண்டும் கதைச் சித்திரிப்புக்களைத்தான் இலக்கிய உலகம் காட்டுகின்றது. இக்கதைப் பாத்திரத்தில் தோன்றும் நிரஞ்சன் என்னும் மாணவன் அடிப்படையில் மனம் பாதிக்கப்பட்ட வன்முறையாளனாக இருந்த போதிலும் குணரட்னம் என்னும் ஆசிரியர் அவனை அடி சறுக்கின வன்முறையாளனாகப் பார்க்காமல் அதுவும் தன் மகன் வசந்தனுக்கு அநீதி இழைத்தவன் என்று கூடப் பார்க்காமல் அவனை குறி வைத்துத் திருத்தும் நல்லாசானாய்காட்டி எதிர்காலத்தில் ஒரு வைத்திய அதிகாரியாய்ப் பார்க்கிறார் என்றால் கல்வி உளவியல் அடிப்படையில் மாணவனை அனுகி நல்வழி காட்டுகிறார். மேலும் மாணவனது குற்றத்தை பெரிதுபடுத்திக் கொண்டோ பழி வாங்கும் எண்ணம் கொண்டோ கதைக்கான கருவை நகர்த்தாமல் குறிப்பாக மாணவனது வளர்ச்சியை மட்டும் மையமாக வைத்து கதையினை நகர்த்தி இருப்பது நஸீறுதீனின் எழுத்தாளுமையின் சிறப்பம்சம் என்று சொல்லலாம்.

'சுய பரிசோதனை' எனும் கதை முற்றிலும் குடும்ப வாழ்க்கையில் பெண்ணாதிக்க நிலைவுலகைக் காட்டுகிறது. ஆண் வர்க்கம் உயர் பதவி, அந்தஸ்து ஆகிய முக்கிய அதிகாரங்களையெலாம் பெற்று வெளியுலகில் பெயரும் புகழுடன் வாழ்ந்திருந்தாலும் இல்லற வாழ்க்கையில் தலைவன் என்ற பதவி வகிக்கின்ற வேளையில் எழும் தர்ம சங்கடங்களையும் மனவுளைச்சல்களையும், சகிப்புத்தன்மைகளையும் பற்றிய கசப்பான அறிகுறிகளை கோடிட்டுக்காட்டும் கதையம்சங்களைக் கொண்ட கதையாகும்.

தந்தையின் கட்டுப்பாட்டுடன் மார்க்கக் கல்வியை கற்றுத் தேறி அவரது விருப்பத்திற்கேற்ப பெரும் சீர்வரிசையோடு ஒரு அழகிய பெண்ணைத் திருமணம் முடித்து பாடசாலையில் கல்வி புகட்டும் ஆசிரியராகவும் ஒரு அதிபராகவும் இன்னும் சில விஷேசத் தன்மைகளைப் பெறுகின்ற ஒரு குடும்பத்தலைவர் புற வெளிச் சூழல்களை நிர்வகிக்கக் கூடிய ஆளுமை, ஆற்றல், அறிதிறன் சில அவருக்கே உரித்தான தனித்தன்மைகளை மட்டும் கொண்டு இயங்குகின்றாரே தவிர தம் சொந்தக் குடும்ப வாழ்வில் மனைவியின் ஆதிக்கமும், பிள்ளைகளை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாத சூழ்நிலையும், சுதந்திரமாய் செயற்பட முடியத நிலையும் இங்கு தலை குனிய வைத்துள்ளது. வீட்டில் நடக்கும் காரியங்களில் தன்னாதிக்கம் செலுத்திக் கொள்ள முடியவில்லை. அதில் முனைந்து தோற்றுப் பின்வாங்கி நெஞ்சில் திராணிகளற்று நிற்கும் குடும்பத்தலைவர்களை அதிகார ஆட்சி செலுத்துகின்ற மௌலவியின் வாப்பாவுடன் பொருந்திப் பார்க்கத் தூண்டா விட்டாலும் அத்தகைய சிந்தனையை முன்வைக்கும் இக்கதை நேரிய குணம் படைத்த குடும்பத்தலைவனாக மௌலவியின் வாப்பாவைக் காட்டினாலும் இறுதிச் சந்தர்ப்பத்தில் திருமணச் சந்தையில் மகனை ஏலத்தில் விற்றதால் மகனின் குடும்ப வாழ்வியலில் சுய கௌரவங்கள் தலை கீழ் மாற்றம் பெறுகின்றன. மிக நீண்ட காலச் சித்திரவதைக்குள் தம் மகனை தந்தை ஆளாக்கி விட்டார். ஆனால் படியாத தந்தை கொண்டுள்ள அதிகாரங்களை நன்கு படித்தவர்களால் பெற்றுக்கொள்ளவும் முடியவில்லை. விளைவாக, கோழைத்தனமானதோர் வாழ்வியலை படித்தவர்கள் அனுபவிக்கிறார்கள். எனினும் படித்தவர்கள் எத்தருணத்திலும் தான் கற்ற கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. தம் மனோ இச்சைக்கு உடன் அடிபணிந்து விடுகின்றார்கள். இவர்கள் கொடிய சீதனச் சந்தைப் புழக்கத்திற்கு அடிபட்டுப் போவதை கதையோட்டத்தில் பெரிதாக உணர்த்தாமல் விட்டாலும் அது மிகத் துல்லியமாக விளங்குகின்றது. நஸீறுதீனின் இக்கதை வாசகர்களுக்கு ஆத்ம நேயத்தை உண்டு பண்ணக் கூடியதாகும்.

''சிலந்தி வலையும் கூட்டுப் புழுக்களும்'' எனும் கதை தூய்மையான காதல் உருவாக்கத்துக்கும், இன நல்லுறவுக்கும் அடித்தளமாக இருந்த போதிலும் நாட்டில் குடி கொண்டுள்ள கொடிய இனப்பிரச்சினையானது இரு உள்ளங்களையும் ஆத்ம சுத்தியோடு இணைந்து வாழ இடம் கொடுக்கவில்லை. காரணம் எவ்வஃாவுதான் நகமும் சதையுமாய் குறித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையில் வரும் ஈரிவங்களும் வாழ்கிறார்கள் என்றாலும் எவ்வளவு கலப்புத்திருமணங்கள் செய்து இன ஐக்கியத்தை விதைத்தாலும் இனமுறுகல் இனமுறுகலாகவே இருந்தது. சியாமளா ஒரு தமிழ் மங்கை. அவளது காதலன் ஒரு முஸ்லிம். அவளது இனத்தவரால் கொலை செய்யப்படும் காதலனை செய்தி அறிந்தோ அல்லது அறியாமலோ மிக நீண்ட நாட்களாய் வாழ்நாள் பூராய் தன்னுயிர் காதலன் வருகைக்காய் காத்திருக்கும் பரிதவிப்பை உணர்த்தும் இக்கதை நெஞ்சில் ஆணி அடித்தாற்போல் சொல்லுகிறது.

நஸீறுதீனின் மற்ற கதையில் வருவது போலவே 'பெரிய தனம்' எனும் கதை முடுக்கிலும் சீதனச் சந்தையில் விலைபோகும் படித்த அடிமட்டத்து வாலிபர்கள் அடிபடுகிறார்கள். அதிலே சீதனச் சந்தைக்கு விலை போவதா அல்லது குறுக்கே நிற்கும் நிஜ ஆல்மாக்களுக்கு கட்டுப்படுவதா எனும் கருத்துப் பரிமாற்றங்களும் நரகர்களும் நண்பர்களும் சகஜமாக நடமாடுகிறார்கள். அவர்கள் கற்ற கல்வியில் பெரிய தனம், ஈவிரக்கமற்ற சிந்தனை, முரட்டுக்குணம், படியாதவனிடம் இல்லாத கெட்ட பண்பாடு என்ற குறைபாடுகள் நிறையவே உண்டு. ஆனால் தாங்கள் சீதனச் சந்தைக்கு விலைபோனால் இக்கதையில் வரும் வாஹிதின் கற்பனையில் உலவும் ஐம்பது வயது மாலினி போன்ற ஒரு அந்நியப் பெண்ணைத் திருமணம் முடித்தது போலாவாள் என்ற செய்தியை கதாசிரியர் சிறிது தொட்டு வைத்தாலும் வெளியே அழுத்தமாகச் சொன்னாலும் சீதனத்துக்கு விலைபோகின்றவனுக்கு அதுதான் தண்டனை. பணத்துக்கும் புகழுக்கும் என்று பஜ்ஜை விற்பவனுக்கு மனைவி, பிள்ளைகள் குடும்பம் என்ற வாழ்வில் நிம்மதி இல்லை. வாஹிதுக்கும் இக்கதிவராமல் முன்னெச்சரிக்கைச் செய்தியோடு கதைக்கு சீதனச் சந்தைக்கு விலைபோகும் ஆடவர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி உத்தரவு பிறப்பிக்கிறார்.

'சரிகானல்' கதையில் வரும் வாப்பாக்கள் இப்போது மறைந்து விட்டார்கள் படியாத வாப்பாக்கள் போதித்த ஒழுக்கம் நெறிமுறைகள் கொண்ட மனித நேய உருவிலானபிள்ளைகள் சமுகத்தை இன்று உருவாக்க முடியவில்லை. காலங்கள் பகைத்து நிற்கின்றன. மக்கள் சமுகத்தில் பெரும் புகழும் உயர் அந்தஸ்துடனும் வாழுகின்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கூட திட்டமிட்டு வாழ்க்கையை வகுத்து வாழ்வதில் தன்நிறைவு அடைந்த சக்தி வாய்ந்த ஒரு அறிஞராக விளங்கிய போதிலும் சாதாரண கடைவைத்து நடத்தும் அக்காலத்து வாப்பாமார்களுக்கு முன் சிறுத்துப்போவார்கள். திமிர் பிடித்து அகங்காரத்துடன் வாழும் அடக்க முடியாத தம் மனைவிமார்களை அடக்கியும் கட்டுக்கடங்காமல் வளரும் தம்பிள்ளைகளை நன்கு நெறிப்படுத்தி கல்வியில் உயர் வல்லுநர்களாக வளர்த்து திருமண வாழ்வு என்றால் அதற்கென சிறிய விதிமுறைகளை வகுத்து வாழ்ந்து காட்டிய வாப்பாமார்கள் இல்லையெனில் மனைவி - கணவன் பிள்ளைகள் என்ற வாழ்க்கை மட்டுமல்ல சமுகத்தில் எந்தத் துறையும் வளர வழியில்லை என்று தான் அறிந்த வாழ்க்கை முறைகளை நம் முன் வைக்கிறார் நஸீறுதீன்.

இறுதியாக இடம்பெறும் 'நிறைவு' எனும் கதை நூலில் இறுதி நிறைவாக நிற்கிறது. இக்கதையில் 'நஸீமா தம் கணவன் இழந்ததிற்குப் பின் நடத்தையில் மாற்றங்களும் கருத்துக்களில் குழப்பங்களும் சிந்தனையில் பிதற்றல்களும் கர்வமும் உடைய கிராமியப் பெண் ஒருத்தி மேற்கத்திய லௌகீக நாகரிகத்திற்குள் மூழ்கி பாழ் கிணற்றுக்கிளையாக ஒரு மமதை வாழ்க்கை தம் சகோதரியிடமும் குடி கொண்டுள்ளதைக் கண்ட சகோதரன் அவளை கூர்மையான வாதத் திறமையினாலும், அறிவுத்திறத்தினாலும் புடம் போட்டு மறுபடியும் வார்த்தெடுக்கப்பட்ட தங்கம் போன்ற பழமைக்கால ஒரு குலப்பெண்ணாய் மீள்வதற்கு முயற்சி செய்கிறான். அதில் வெற்றியும் காணுகின்றான். எனில் ஆண் பெண் சமத்துவக் கொள்கை நிலைப்பாட்டில் உள்ள சில அம்சங்களின் சிக்கற்பாடுகள் பற்றி விளக்கங்கள் போதாது. எனினும் கதையினுள் முழுக்கச் சொல்வது சுலபமல்ல. மேலைத்தேய பெண்ணியல் வாழ்வின் அலங்கோலங்கள் பற்றிய விமர்சனத்திலிருந்து விடுபட்டு பெண் வாழ்க்கை இந்த நிலையில் இருந்தால்தான் நல்லது என்று சொல்லுகிற அளவிற்கு கதை அமைந்துள்ளது எனலாம்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் எம்.எல்.ஏ.காதரின் முகவுரையும், அக்கரைப்பற்று தேசிய கல்லூரி அதிபர் எம்.ஏ.உதுமாலெப்பையின் அணிந்துரையும் கலந்து நூலின் நுன் பொருட்டாகிய பருப்பொருட்கள் பெரிதும் துணை நிற்கின்றன. நூலாசிரியர் சிறந்த நூலக வாசகன் என்பதால் இந்திய எழுத்தாளர் ஆதவனின் சிறுகதையினுடைய தாக்கமோ அல்லது ப்ராடிய உளப்பகுப்பாய்வின் சில கருதுகோள்கள் ஆட்கொண்டிருக்குமோ என்று சந்தேகிக்கத் தூண்டுகிறது.

"உலகம் முழுவதுமே கல்வியாளர்களின் உளவியல் கூறாக இயங்கும் 'தான் கற்றவன், தான் அறிந்தவன்' என்ற தன்முனைப்புக் காரணமாகக் கல்வியியலாளர்கள், தாங்கள் கற்ற நூல்களில் இருந்து மேற்கோள்களைத் திரட்டி எழுதுவதில் ஆர்வமுடன் ஈடுபடுகின்றனர்." என்று கூறும் கைலாசபதியின் கூற்றை கலாநிதி க.பஞ்சாங்கம் அவர்கள் எழுதிய "தமிழ் இலக்கியத்திறனாய்வு வரலாறு" எனும் நூலில் பதிவு செய்கின்றார். நஸீறுதீனின் கதைப் போக்கும் ஒத்த தன்மையுடையவைகளாக அமைந்து விடுவதற்கு ஒவ்வொரு கதைகளிலும் ஆங்காங்கே நபிகள் நாயகத்தையும், குர்ஆன் ஹதீஸையும், ரூசோவையும், காந்தியையும், இராமகிருஷ்ணரையும் பிறரையும் மேற்கோள்காட்டி எழுதுவதிலிருந்து புலனாகும்.

ஆனால் இதற்கும் நிரம்பிய வாசிப்பு வேண்டும். அந்தப் புலமைத்துவத்திறன் நஸீறுதீனின் எழுத்தில் துல்லியமாகத் தெரிகிறது. சிறுகதை இலக்கிய வரலாற்றில் கல்வி உளவியல் பண்பாட்டை வைத்து நோக்குவதற்கான ஒரு நூல் [illegible]

-இ.அ.-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org